ஸ்ரீ

 ஸ்ரீராமஜெயம்.

திருப்பதி

வெங்கடேசபெருமாள்

நாடகம்.

காலஞ்சென்ற

கூள-முனிசாமிமுதலியார் பாரியாள்

அம்மணி அம்மாள்

சகலசுதந்தரமும் பெற்றுக்கொண்டு

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1926. [அணா 6.

1

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

திருப்பதி

வெங்கடேசபெருமாள் நாடகம்.



காலஞ்சென்ற

சூளை-முனுசாமி முதலியார் பாரியாள்

அம்மணி அம்மாள்

சகலசுதந்திரமும் பெற்றுக்கொண்டு

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1926. [அணா 5

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருப்பதி

வெங்கடேச பெருமாள் நாடகம்.

விநாயகர் துதி.

ஓமென்னும் பொருளேபோற்றி
  உமையவள் மகனேபோற்றி
காமனை எரித்தவீசன்
  மைந்தனே போற்றிபோற்றி
வாமனரூபமான
  வைகுந்த வாசன்மேல்பாட
தாமதமில்லாக் கணபதி
  சபைதனில் வருகின்றார்.

விநாயகர் வருகிற தரு.

வல்லபைகணபதி　　　　　　வந்தார்
  சிவன்மைந்தன்　　　　　　வல்லபை

வல்லபைக்கணபதி　　　　　　வாழ்ந்திடுங்குணபதி
ஆனைமுகமிலங்க　　　　　　அழகுபுஜம்துலங்க
சேனைதளங்கள்சூழ　　　　　　திருவடிபாதம்துலங்க　　வல்

தண்டையம்கடகமாட　　　　　　தாளமத்தளப்போட
அண்டையில்மாதராட　　　　　　அழகாய்வெண்சாமரைபோட　　வல்

வேலருக்குமூத்தோன்　　　　　　வீதியிலின்றுகாத்தோன்
பாலும்பழமுமுண்போன்　　　　　　பாதையில்வந்தமர்ந்தோன்　　வல்

சரஸ்வதி துதி விருத்தம்.

மெரிலும் கன்றாகவென்று
  அன்னைசரஸ்வதியே போற்றி
குருவாழ்க குருவேதுணையென்று
  குரிந்துவுன் மலர்த்தாள்போற்றி
வரும்வழி தன்னைப்பார்த்து
  வாடியே பாலர்நாக்கள்
திருவடி தன்னைக்காண
  சித்திக்கப்போற்றிநேனே

மகாவிஷ்ணு அதி தரு

வாரும் அரிகரியே வைகுந்தத் தக்கதிபதியே
வாரும் அரிகரி வைகுந்தமேகதி
சிறும்பெருமிடக் காரும்முராகரி வா

அரியேதிருமாலே ஆதரிபும்பெருமானே
பெருமையுங்கீர்த்தியை புகழ்ந்துதோத்தரித்திட வா

சங்குசக்ரபாணி சரித்திரமேபூணி
எங்களைகாத்திட இவ்வேளைவரவேணும் வா

சிங்காரமாய்நீரும் தேவன்கெருடனேறி
பங்கயக்கண்ணனே பாலனைக்காத்திட வா

திருப்பதிநகர்தன்னில் தேவன்திருக்கூத்தை
பொருப்புடனேபாட புண்ணியனேவாரும் வா

வைகுந்தவாசரே மனதில்குடியாக
செய்யும்நாடகத்திற்கு சிந்தையொன்றுனாமல் வா

ஆழ்கடலுலகெங்கும் அமர்ந்தபெருமானே
அடியேன்செய்பிழையெல்லாம் அபசாரம்பொருத்துமே . வா

பலராமர் கவி.

பாரியமுடிகளுமே பளபளென்ன
அணிந்தபட்டாடையுமே தகதகென்ன
பாதமதில்தண்டையது கலகலென்ன
பலவரிசைதன்னுடனே செங்கோலேந்தி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

சீரியேதானெழுந்து கிருஷ்ணமூர்த்தி
சிந்தையில்பலபணிகள் சீராய்பூண்டு
கூரியதோர்மாதுவின் தயையால்தந்து
குணமுடனேதிருநடனம் புரிந்துநிற்க.

பலராமர் கவி.

சரியாய்விசாரணை புரிந்திட
சகலரும்வந்துகை கட்டிநிற்க
சப்தசாகரமு மகிழ்ந்துமேவிழுந்தாய்
சகல அந்தணர்வேத கோஷ்டங்கள்பாட,

கிருஷ்ணமூர்த்தி கவி.

பேரிகைமுரசுடங்கா மல்லரிதத்தரி
வீரசின்னங்க ளுதிவாவே

பிடிபடா வாத்தியம் கடலொலிபோலவே
பிரசண்டகோதண்ட உத்தண்டனெழுந்தார்

பலராமர் கவி.

பாராளரெண்ணியே பலராமரோடி.

கிருஷ்ணமூர்த்தி கவி.

சீரானகிருஷ்ணரும்பூரிக்கைதயாய்கூடி

பலராமர் கவி,

தாராளமாகவே சபைதனைத்தேடி.





பலராமரும் கிருஷ்ணமூர்த்தியும்
வருகிற தரு.

பலராமர் அரிகிருஷ்ணரும் பலபணி அலங்கரித்து
கலகலென்றுதண்டையாடவே கனகசபைவாரார் பல
அண்ணன் தம்பிஇவர்கூடி அரசசெங்கோல்தான்புரிய
மன்னர்மன்னர்வந்துசூழ மாளிகைவிட்டுவாரார்பாரீர் பல
கெருடக்கொடிபறக்க கெந்திருவர்முன்நடக்க
திருடனைகிருஷ்ணன்கூடி சீர்சபைக்குவாரார்பாரீர் பல
வீரகர்னன்சிசுபாலன் வெற்றியுள்ளசாம்புவந்தான்
தாரையுடன்பூரிபாட சகலபேரும் வந்தனரே பல

தேசவிசாரணை.

பலரா பிர்மாலயந்துவாரயம் சிவாலயம்
மூன்றுகாலமும்பூசை செவ்வையாய்நடந்துவருவதா

கிருஷ். சொற்படியேநமது கடாட்சத்தால்தேர்திருவிழா
தினந்தினம்நடந்துவருகின்றது அண்ணா

பலரா அந்தமாவேதியர் அவரவர்கள்நேமநிஷ்டை
அனுதினம் செய்கின்றனரா

கிருஷ் உந்தனிடமொழிப்படிக்கி அவரவர்
உண்மையாய்நடக்குறார் அண்ணா

பலரா இன்பமாய்நமது தேசத்திலுள்ளகுடிகள்
இடுக்கமில்லாமல் வாழ்கின்றார்தம்பி

கிருஷ் துன்பமில்லாமலே அவரவர்நமதுகிருபையால்
சுகமாகவாழ்கின்றார் அண்ணா

பலரா நீதியின்படியேநமது ராச்சியமெல்லாம்
நிகரில்லாமல்இருக்கிறாரா தம்பி

பலராமர் சொல் வசனம்.

கேளும் தம்பி நமது ராச்சியம் சுபேட்சமா யிருக்கின்றபடியால் அதிக சந்தோஷமடைந்தேன் நம்மைப்போலொத்த ராசர்கள் ஆளப்பட்ட சீமைகளெல்லாம் அவருடையக்ஷேமங்களை அறியவேண்டியிருப்பதால் நாமிருவரும் இன்றாத்திரியில் சென்று அந்தந்த தேசங்களைப் பார்த்துவருவோம் வாரும்தம்பி கிருஷ்ண மூர்த்தியே.

பலராமர் சொல் தரு.

தேசங்கள்பார்க்கவே ஆசையாயிருக்கு
சீராய்நடந்துவாரும் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கூசமில்லாமலே ஆசையாயிருக்கு
கூடநடந்துவாரும் அண்ணா

பலராமர் சொல் தரு.

ஆசையுடனேவந்து அழகுள்ளதேசமிது
ஆருதுசொல்லும்என் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

வாசங்கள்செய்திடும் வாதாபிஎனதாபி
வாழ்ந்திடும்தேசமது அண்ணா

பலராமர் சொல் தரு

அச்சமில்லாமல் வாழும்சீமையது
அதையெனக்குரைசெய்யும் யென்தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

கொச்சிதேசமிது குடகுதேசம்பாரும்
குறிப்பாககண்டிடும் என்னண்ணா

பலராமர் சொல் தரு.

வெக்கிரமாளிகை கட்டியேவாழ்ந்திடும்
மன்னவனூர்சொல்லும் என்தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

மச்சிதேசமாரும் விராடபூபன்
மாளிகைதோபாரும் என்னண்ணா

பலராமர் சொல் தரு.

சந்நமஞ்சாமலே சித்தமகிழ்ந்திடும்
தேசமெதுசொல்லும் என்தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

ஒத்துமையாகவே வாழ்ந்திடும்ஜனர்கள்
உபலாவியபட்டணம் என்னண்ணா

பலராமர் சொல் தரு

தாண்டிபேவந்தோமே சதுரானதேசமெல்லாம்
தனிதேசமாருது தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

தாண்டிபேயோபத்தாலே துடிக்கஉயிர்வாங்கு
பாண்டியதேசமிதனை அண்ணா

பலராமர் சொல் தரு.

ஏழைகுடிகளெல்லாம் தாழ்வில்லாமல்வாழும்
எத்தேசமிதுஎன் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சோழதேசராசர் ஆண்டபூமியிது
சொல்லிவந்தேன்பாரும் அண்ணா

பலராமர் சொல் தரு.

பொருந்தியகாற்றினில் வாடைகவீசும்
இருந்துபோகலாம் தம்பி

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

திருவந்திராவேயீதில் பொருந்தியேயிருக்கலாம்
சேரயாடத்துவாரும் அண்ணா

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக கிருஷ்ணமூர்த்தியானவரும் பலராமரும் திருவந்திமவேளையிலிருந்து இளைப்பாறி யிருக்கின்றபோது பலராமர் கிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

பலராமர் சொல் விருத்தம்.

தம்பியேசொல்லக்கேளாய் சனிவாரம்பிறந்துபோச்சு
துப்பலாயிருவர்கூடி ஆனமுடன்வெண்ணையிட்டு

சம்பிரமாய்ஸ்நானஞ்செய்ய சலமுங்கிடைக்கக்காணோம்
தென்புள்ளகெருடன் தன்னை சீக்கிரம்வாச்செய்வாயே

வாரும் இன்திராத்திரி பதினைந்துநாழிகை ஆய்விட்டபடியால் சனிவாரம் பிறந்துவிட்டது நாமிருவரும் எண்ணெயிட்டுஸ்நானஞ் செய்ய வேண்டியிருப்பதால் இவ்விடத்தில் ஜலம் கிடைக்காதபடியா ல் கெருடனைக் கொண்டுவரும்படிச் செய்யவேண்டும் ஆகையால் ஏனது வாகனமாகிய கெருடனை யழைப்பியும் தம்பி கிருஷ்ணமூர்த்தி



கெருடன் சொல் விருத்தம்.

இந்தமொழிதன்னைகேட்டு எழுந்துமேகருடன்தானும்
அந்தமாயலங்கரித்து ஆடைகள்பரிமளிக்க
எந்தனையழைத்தசேதி யென்னமோவரியேனென்று
நந்தகோபாலர்முன்னே நாடியேவருகின்றாரே.

கெருடபகவான் வருகிறதரு.

சித்திரைப்பதுமைபோலே
திரேகப்பளபளென்ன

கிருஷ்ணதேவர்
செங்கருடனும் நானே
நானே
யேறும்வாகனம்

பணிகொஞ்ச
வைத்திழைத்தப்
வாடைபரிமளிக்க சித்
வானவர்தேவர்களஞ்ச

திரேகம்பரிமளித்து
சிங்கைதமனங்களித்து
நாடியேவந்தேனே சித்
தேடியேவந்தேனே அரிபாதத்தை

நாடி அழைத்ததென்னை
நந்தகோபாலர்நம்மை
தேடி அறிவோமென்று சித்
நாடி அவர்பாதமதை

முடியும்பளபளென்ன
முத்துபதக்கமின்ன
வேடிக்கையாக மோ
மோகனப்பணிகள் துன்னவே

எமகிரியுமொடுங்க
எத்திசையும்நடுங்க
சொருசாய்தாளங்கள்போட சித்
சுற்றிலும்மாதர்களாட

வெமனுமதிசயிக்க
எங்கும்பிரகாசிக்க
கெருடதேவன் வெ
எழுந்துயிதோவந்தாரே

அங்கமதில் நிந்தகாமம்   பொங்கமுடன் துலங்க
மங்களமாகவேயிவர்   மாயன்சபையைத்தேடி   சித்

கெருடபகவான் சொல் ஜம்பை.

சங்கசக்ராப்யேந்துங்கையா   சாரங்கபாணியே
எங்குநிறைந்தமாலே   மேகவண்ணாசரணம்
சங்கதியையெந்தனுக்கு   சாற்றுவீர்தேவா
மங்கைலக்ஷ்மியே   மாயகிருஷ்ணதேவரே
எங்குநிறைந்தமாலே   மேகவண்ணா சரணம்
உந்தன் திருபாதத்தை   உண்மையாய்தொழுதுநின்றேன்
இந்தமலைமீதில்நீங்கள்   இருவருமாய்வந்ததென்ன
எந்தனுக்குவிபரமாக   வந்ததையுரைப்பீர்

கெருடபகவான் சொல் வசனம்.

சரணம் சரணம் கர்த்தனே இந்த மலைமீதில் என்னை ஏது காரணமாக அழைப்பித்தீர் அதை இன்னதென்று திருவுளம்பற்றியருள் செய்ய வேண்டுமையா சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாருமப்பா கெருடா இன்றையதினம் சனிவாரம்பிறந்தபடியால் நாம் ஸ்நானம் செய்யவேண்டியிருப்பதால் ஜலம் கொண்டுவாருமப்பா கெருடனே

கெருடன் சொல் தரு.

அடிக்குள்ள அண்டமெல்லாம்   கொடிக்குளரிவேனென்று
அதிரவேதானடந்தான்கெருடதேவன்   அதிரவேதானடந்தான்
திக்கிடதேவரெல்லாம்   முடுக்குடனேயெழுந்து
சீரியேதானடந்தான்   கெருடதேவன்சீரியேதானடந்தான்
எத்திசைரிஷிமுனிவர்   தத்தியேபறந்தோட
எதிராகதாநடந்தானே   கெருடதேவனெதிராகதானடந்தானே
காசிநதிதன்னைக்கண்டு   களத்தமகிழ்ச்சிகொண்டு
காலனைப்போல்வந்துநின்றார்   கெருடதேவன் கால
கோரமானமூக்கைநீட்டி   ஆருபோலத்தான்விழித்து
குன்னுருகில்வந்துமுழக்   கெருடதேவன் குன்

பொதுவசனம்.

இந்தப்பிரகாரமாகக் கெருடபகவான் காசிநதியைக்கண்டு மூக்கினால் விழித்து சுவாமியிரானின்ற மலைபருகில் மூர்ச்சையாய் விழுந்துயிருக்க அந்த சமயத்தில் கெருடன்போனவனைக்காணோமென்று பலராமர் கோபித்துச் சொல்லுகிற விதங்காண்க.

பலராமர் சொல் கவி.

அப்பனே தம்பிகேளாய் அனுப்பினோம் அவனைக்காணோம்
சர்ப்பமாயிருக்கும் ஆதி சேஷனை வரச்செய்வாயே.

வசனம்.

கேளுந்தம்பி ஜலங்கொண்டு வரப்போனகெருடன் இன்னம் வரக்காணோம் நாங்வந்து வெகுநேரமாய்விட்டது நாகேந்திரனயிருக் கப்பட்ட ஆதிசேஷனை வரச்செய்யுந் தம்பி.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

செப்பியபலிக்குயானுந் சிந்தையில் தயாரங்கொண்டு
தப்பிதம்வாராமுன்னே சடுக்கெனவரச்செய்வேனே.

வசனம்.

கேளும் எனது அண்ணாவே உன் மனதின்படியே ஆதிசேஷனை அழைப்பிக்கிறேன் அண்ணாவே.

ஆதிசேஷன் சொல் விருத்தம்.

எத்திசைநடுங்க யெமகிரிதத்தளிக்க
கத்தியும்பிண்டிபாலர் கைதனில்பிடித்துக்கொண்டு
சுற்றியேநாகசேனை சூழ்ந்துகொண்டாடயென்னை
சத்தமுங்கலகலென்ன ஆதிசேஷனும் வருகின்றானே.

ஆதிசேஷன் சொல் தரு.

வந்தானே ஆதிசேஷன் பாரீர் நல்ல
வாகனகெருடனேநாம் அரியினிடசேஷன் வந்

இந்திராதிதேவர்களும் வாட நல்ல
இமையாணபாட்டை பணிகளுமேயாட
சுற்றிலும்மாதர்க ளாட
சொகுசுடனேதான மத்தளங்களும்போட
கட்டாரிசிலைவாளு மேந்த நல்ல
கண்டவர்திடுக்கிட்டு ஓட அந்த
எண்டிசைபுவனமு மதிக்க நல்ல
இந்திராதிதேவர்களும் வந்துமேதுதிக்க
செந்தாமரைக்கண்ணன் பாதப்தேட
தேடியேதுரசாகவே யோடிநாடினேன் வந்

ஆதிசேஷன் தரு.

சுவாமியேநீங்களிந்த மலைமீதில் அய்யா
தனியாகவந்ததென்ன அதையுரைப்பீர்மெய்யா
இஷ்டம்வைத்தயென்ன அரிகேசவா

அடைமுன்னமேயெந்தனுக்கு உள்ளமுமகிழவே
என்னையின்னாமல் சொல்லுதாசரி — சுவாமி

பலராமர் சொல் தரு.

சொல்லுறேன் ஆதிசேஷா — நீர்கேளும்
அதிதாய்க்கரைகட — சென்றுநீயும்
அலைவடைந்திடாமல் — நல்லஜலங்கொண்டுமே
அரசிமிஷத்தில்வாரும் — ஆதிசேஷா சொ

ஆதிசேஷன் சொல் தரு.

அய்யாகாண்சருணம் — மெய்யாவுன்திருவடிக்கு
அதிக்துகான்வாரேனையா — அரிகேசவா
வைபுவந்தனிலே — வழிபார்த்துநானும்
வரையுநிக்துவாரேனையா — அரிகேசவா

மன்னவன்கெருடன் வந்திடுமுன்னே
மின்னகர்தனிலே சொன்னதுபோல்வாரேன்

பலராமர் சொல் தரு.

சித்தங்கலங்காமலே — தேடியும்பார்த்து
உற்றதையெந்தனுக்கு — உரைப்பாய் ஆதிசேஷா
சித்தங்களிக்கவே — தேடி நதிகள்சென்று
தீர்த்தஜலங்கொண்டுவருவாய் — ஆதிசேஷா சரு

தேவகிபோதா ஆக்கினை தூதா
ஜாக்கிரதையுடனே சீக்கிரமாக — சித்

பலராமர் சொல் வசனம்.

கேளும் ஆதிசேஷா நீ அதிவேகமாகச் சென்று ஜலங்கொண்டு வாருமப்பா ஆதிசேஷனே.

ஆதிசேஷன் சொல் தரு கொண்டிச்சிந்து

சண்டப்ரசண்டமுடனே ஆதிசேஷனு மெழுந்து வெகுரோஷத்துடனே மண்டியிட்டு சினமீறி மீசைபடபடவென்றுமே தாடி படமதை தாண்டித்து பூமியில் பாய்ந்துமேமோயோரடியாய்தானடிக்க இடமது நான்கொடுத்து பூமிதேவியுமேமோடியே பதுங்கிருள் திடுக்கென தானெழுந்து கெங்கைஜலமது புரளவேவந்தாளே முடுக்குடன் தானெழுந்து களிப்புடன் முன்னமேவந்து நின்றான் தன்னுடனே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக ஆதிசேஷன் மலையைக்குடைந்து ஜலங்கொண்டு வந்தவிட அந்தசமயத்தில் கெருடபகவான் மூர்ச்சைதெளிந்து கிருஷ்ணமூர்த்தியை நினைத்து துதிசெய்கிற விதங்காண்க.

கெருடபகவான் சொல் தரு ஜம்பை.

ஆசையாகசென்றானாலும் அலைந்துழன்றனே அரி அரி
அலைந்துழன்றனே

காசிநதிதன்னைக்கண்டு களிப்படைந்தனே
மோசம்வராமுன்னம்நானும் மூக்கினால்கிழித்து அரி அரி

முன்னேகொண்டுவரானாலும் முயர்ச்சிகொண்டேனே
பச்சைநிறமேனியனே பலர்க்குமெய்ப்பனே அரி அரி

இச்சைவையும்யெங்கன்மீதில் யெழுந்துவரவே
நாராயணா அரிகோவிந்தா னந்தகோபாலா அரி அரி

சீராயெந்தன்மீதில் சிந்தையில்லையோ

கெருடபகவான் சொல் வசனம்.

அரி அரி ஸ்ரீமந்நாராயணா உமதுகிருபையால்காசிநதியைக்கண்டு மூக்கினால் கிழித்து இந்தமலையருகில் வந்துவிழுந்தேன் இந்தவேலை களைதெளியும்படி கண்பாருமையனே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக கெருடபகவான் காசிநதியைக்கண்டு மூக்கினால் கிழித்து இந்த மலையருகில் சுவாமி முன்பாக கொண்டுபோக வேண்டுமென்று எண்ணங்கொண்டு வருகையில் சுவாமி யிருக்கும் மலைக்குப்பின்னால் வந்துவிழுந்து களையினால் தோத்தரிக்க கிருஷ்ண பகவான் ஞான திருஷ்டியினா லறிந்து ஞானமந்திரத்தையுச்சரிக்க அப்போது கெருடனெழுந்திருந்து சொல்லுகிறதுகாண்க

கெருடன் சொல் விருத்தம்.

இடுக்கிடவேதேவரெல்லாம் கிருஷ்ணன்மனங்களிக்க
அடுக்குள்ள அண்டமெல்லாம் அலரியேவிழுந்தாப்போல
சடக்கெனவெடுத்தானப்போ ஜலங்கொண்டுபோக
முடுக்குடனெழுந்திருந்து சுவாமிமுன்போக.

கெருடன் சொல் தரு.

துடுக்குடன்தானெழுந்து இறங்கிறென்று
சுவாமியிடந்தன்னருகில் வந்துநின்றதாம்
கடுகடுத்துமுகம்வாடாதே யென்றுசொல்லி
கண்டுகொள்வாயிது காசிநதியென்று

பொது வசனம்,

இவ்விதமாக கெருடன் காசி தீர்த்தம் கொண்டுவர அந்த சமயத்தில் ஆதிசேஷன் மலையைத்துளைத்து ஜலங்கொண்டுவருவதை கெருடபகவான் கடூரமாகிய கோபமாய் வருவதைக்கண்டு கிருஷ்ண

மூர்த்தி கையைக்காட்டி கோபத்தைத் தணிக்க அச்சமயத்தில் ஆதி சேஷன் கோபமாக கெருடபகவானைப் பார்த்து சொல்லுகிறவிதங் காண்க.

ஆதிசேஷனுக்கும் கெருடனுக்கும் தர்க்கம்

ஆதிசேஷன் சொல் கவி.

செஞ்சிலம்புதையுங்காலும் செங்கெருடாநீயுங்கேளாய்
சஞ்சலம்வதனேதன்ன ஜலங்கொண்டுவாயின்னேரம்.

வசனம்.

அகோவாருங் கெருடனே எனக்குமுன்னே ஜலங்கொண்டு வருவதாகப்போனாய் நானுனக்குப்பின்னால் வந்து மலையைத் துளைத்து ஜலங்கொண்டு வந்தேன் இன்னேரம் என்ன செய்தாயடா கெருடனே.

கெருடன் சொல் கவி.

அஞ்சியேசொல்வேனிப்போ அறிவுகெட்டவனேகேளாய்
மிஞ்சியேகோபத்தாலே வீட்டியால்வாட்டுவேனே.

வசனம்.

அடாவாடா நாகேந்திரா நீயென்ன சமர்த்தனைப் பேசவந்தாய் உன் கெர்வத்தை அடக்குறேன் பாரடா ஆதிசேஷா

ஆதிசேஷன் சொல் தரு.

கெருடனேவாடாஉனக்கென்ன   கெம்பீரமோட
திருடனைப்போல்வந்து   திகைத்துநீபேசுறாய்
தீரமாகவந்தேன்   மாரியடிக்கவுன்னை கெரு

கெருடன் சொல் தரு.

சேஷனேவாடா   வெகுரோஷனேபோடா
தாழுமேஉன்முடி   தரிப்பட்டுஒழுமே
வாழ்வைப்பரிக்கவே   வந்தேனேயிப்போது சேஷ

ஆதிசேஷன் சொல் தரு.

அதிவேண்டாவாடா   உந்தன் ஆண்மைகள்போடா
தெரியுதேயிப்போது   தீரத்தின் ஆண்மைகள்
மரியாதையோஉனக்கு   மடையனேநீபோடா அதி

கெருடன் சொல் தரு

சேப்பேரிபடாபோடா   சோராமல்வெதிராகவாடா
பாம்பாய்பிறந்தவன்   வீசப்பாகபேசுறாய்
சாம்புத்தடியாலே   சதைக்கலைக்குறேன் சோ

ஆதிசேஷன் சொல் தரு.

வல்லமைபேசவந்த   வார்த்தைதானறிவேன்
வாட்டியேயடிப்பேன்   வீரங்காட்டியேயடிப்பேன்

பொட்டிகள்காட்டி நீ சூட்டினாய்சண்டையை
வாட்டியேயடிக்கிறேன் வல்லமைபாரடா வல்

கெருடன் சொல் தரு.

வல்லமைகூறிவந்த ஆதிசேஷனே உன்னை
வாட்டியேபாணத்தை பூட்டியடிக்குறேன்பார் வல்

ஆதிசேஷன் சொல் தரு.

நில்லுமென்றவர் தருத்தினேன் நானுந்தன்மீதில்
வல்லமைகட்டிய வாறுகள்செய்தேன் நில்

கெருடன் சொல் தரு.

சொல்லும்வாயைமூடுமுன்னே தடுக்காயுந்தனைக்கறக்க
ரூக்ஷமமாகபாணம் சருக்காகவிடுத்தேன்

ஆதிசேஷன் சொல் தரு

பாருமென்றபோகதயிப்போ பறைதபறைதக்கஉந்தறைடனும்
தாருமாறாகயுந்தனைநான்சாகக்கொல்வேன்பாருமென்றான்

கெருடன் சொல் தரு.

என்னிடவலுமைபார்க்க யேஷிடயுன்னாலாமோ
மன்னவாகிருஷ்ணதேவர் மணதினில்பகிழ்ந்திருக்க என்

கெருடன் சொல் தரு.

மாட்டியேயடித்தேன் வீரங்காட்டிபோமடித்தேன்
கோட்டிபோட்டிகாட்டி காட்டினேன்நீட்டி
கூட்டியேயுந்தனை வாட்டிடசெய்குவேன் மாட்

ஆதிசேஷன் சொல் தரு.

ஏகவேயடிப்பேன்இருவர்மனமும் நோகவேயடிப்பேன்
போகவேஉயிராது பிடிக்கமனுமலந்திட
நோசவேகாலனும் கொடிதனில்பிடித்திட

பொது வசனம்.

இவ்விதமாக ஒருவர்க்கொருவர் சண்டைசெய்திருக்கும்போது கெருடனைவன் கிருஷ்ணமூர்த்தியிருக்கும்போது எனக்குஎன்ன பயமென்றசொல்ல அந்தசமயத்தில் கிருஷ்ணமூர்த்தியானவர் அதிகோபத்துடன்சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அடிக்கடிசபதங்கூறி அஞ்சாமலடிப்பேனென்றாய்
துடுக்குடன்கோபமாகி துள்ளியேவருகின்றாயோ.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

சக்கரம்வாள் கையிலெடுப்பேன் அவன் தலையை
அரிந்துநானும் விடுப்பேன்
பக்குவமரியாமல் பதரியேபேசினான்
பாவியிவனுயிரை ஆவிபதரச்செய்வேன் சக்க

பலராமர் சொல் தரு.

பதாதேதம்பியேசேனு பாலன்சொன்னசொல்லை
மனம்பொருத் தாளும்
கிதாவேசெய்வது சிறப்பதுநமக்காமோ
சோகயெந்தன்முகம் பாராய்நீயிப்போது பத

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பொல்லாதவார்த்தைகள்பேசினன் ஆதிசேஷன்
போமென்றதடுக்காதே யேதென்னண்ணை
எல்லாம்தெரிந்து யெனக்கெடுத்துரைக்குறீர்
கில்லாதேயென்முன்னே பொல்லாதகோபம்வரும்

பலராமர் சொல் தரு.

இருவரையொன்றாய் பாரும்
இனிவருநம்பிழைகளை நீயுமேகூறும்
பெருமையறியாமலே பேசிவிட்டானே
அருமையாய்நம்மிடம் அடிமைபடலாச்சே இரு

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

அப்படியவன் சொல்லலாச்சு நமக்கு
அடிமையானபின்பு யினியென்னபேச்சு
எப்படி சொல்லுவான் எண்ணிபாராமலே
அப்படியேயவனையும் அதம்செய்துபோடுவோம்

பலராமர் சொல் தரு.

நம்மையேநம்பிவிட்டான் அவன்
நடத்தையறியாமலே கெடுதிகெட்டான்
கும்பலாயிருந்து கூடிநல்லாபழுண்டு
தம்பிநிதானித்து தயவாய்பொருத்திடு நம்

கிருஷ்ணமூர்த்தி சொல் கவி.

அண்ணனார்மொழியைக்கேட்டு அடங்கியேகிருஷ்ணதேவர்
குண்ணியேமனதுவாடி கோபத்தைத்தான் தணித்து
பண்ணியதபத்தால்கெருடன் பக்ஷிடமிழல்பட்டாலே
மண்ணினில்வீழ்ந்து சேஷன் மரணமுமடைகுவானே.

வசனம்.

கேளுங் கெருடனே உன்னை அவமானஞ்செய்த ஆதிசேஷனுக்கு சாபங்கொடுத்தேன் அது யென்னவென்றால் நீ ஆகாயத்தில் பறக்கிறபோது உன்னுடைய நிழல்பட்டவுடன் இறந்துபோவான் உன் மனதின்படி பறந்துகொள்ளும்.

பொது வசனம்.

கிருஷ்ணமூர்த்தியானவர் இவ்விதமாக கெருடனுக்குச்சொல்லி யிருக்கும்போது அந்த சமயத்தில் பலராமர் எண்ணெயிட்டு நீராட வேண்டுமென்று யோசித்து அரப்புகொண்டு வருவார் யாரென்றுமனதில் விலேசமாகவெண்ணி தம்பியைப்பார்த்து சொல்லுகிற விதங் காண்க.

பலராமர் வசனம்.

வாரும் எனது தம்பி யெண்ணெயிட்டு நீராடவேண்டும்ஆனதால் கானகம்சென்று அரப்புக்கொண்டு வாரும் தம்பிகிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் கந்தார்த்தம்.

என்னை நீயாளுமாக யெண்ணியே சொன்னதாலே
பன்னியகோபத்தோடு பார்த்துமேயுருகிநெஞ்சம்
உன்னிடமுகத்தில்நாளும் யொருநாளுமுழிக்கேனென்று
சொன்னதோர் மொழியைக்கண்டு.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

துடுக்குடன் தானெழுந்து கிருஷ்ணதேவர்
தூக்கிஷ்யமலைமேல்காலை வைத்திடவே
அடுக்குகள் மலைகளெல்லாம் கலங்கிட
அலைந்துருலைந்துமலை சாய்ந்திட
இடுக்கெனதான் வாங்கி சாந்திட
திருப்பதிமலைமேல் வைத்திட
முடுக்குடன் தானெழுந்து தேவர்களெல்லாம்
முன்னேயோடிவந்து தன்னருகேநிற்க ஆடு

பொது வசனம்.

கிருஷ்ணமூர்த்தி அண்ணன்பேரில் கோபித்து அண்டரெண்டங்கள் தத்தளிக்க ஓர்காலைதூக்கி நகரிமலைமேல் வைத்து அந்தமலை சரிந்து ஓடக்கண்டு காலைவாங்கி திருப்பதிமலைமேல் வைத்து நாம் இருப்பதற்கு நடலயிவம் இதுவே சரியென்று திருப்பதியென்று நாமதேயமிட்டு யிருக்கின்றபோது அந்த சமயத்தில் கெருட பகவான் ஆதிசேஷன் பேரில் கோபமாகி சொல்லுகிற விதங் காண்க.

கெருடபகவான் சொல் தரு சாமா.

அண்டாண்டங்கிடுகிடென்ன அதிரப்பறக்குறான்கெருடன்

அதிரப்பறக்குறான்
ஆதிசேஷன்யெங்கேயென்று   வருகுறான்
அவன் தட்டிவருகிறான்
மண்டலத்துதேவரெல்லா   மதித்துவாடவே
யென்னை துதித்து   ஓடவே
மடையன்யெங்கே   போனானென்று
யரித்துத்தேடியே   அவனை
குறித்துத்தேடியே
என்னைக்கண்டுமேயெளிதமாக   யெண்ணிப்பேசினான்
மனமருள்னை   வீசினான்
எங்கேபோனான்   னென்றுசொல்லி
பேசிவருகிறான்   கையை
வீசிவருகிறான்
எந்தஇடத்திலிருந்தாலுமவனை   ஏங்கிப்பிடிப்பேனே
மனம்பீதக்க   அடிப்பேனே
என்னிடநிழல்   பட்டவுடனே
எரிந்துபோவானே   மனம்

ஆதிசேஷன் சொல் தரு.

இந்தமோடிசெய்யலாகுமே   கோபாலகிருஷ்ணா
எந்தன்மனமறிந்து   யிஷ்டந்தன்னை தெரிந்து
மந்திகெருடனுக்கு   வரமதுகொடுத்தாயே இந்

என்னபுத்தியினைத்தாயடா   கோபாலகிருஷ்ணா
எப்படிச்செய்ய   மனந்துணிந்தாயோ
அண்ணைதந்தைநீயெனக்கு   அடிமையேநானுனக்கு
அண்டியிருந்தவனை   ரண்டகஞ்செய்திடலாமோ இந்

பாருலகில்யென்னைகண்டால்   கோபாலகிருஷ்ணா
பயந்துநடுங்கியே   யோடுவார்
பெருங்கீர்த்திகளெல்லாம்   பெருமையழிந்துபோச்சே
காருபலராமாயென்னை   கர்த்தனேஉனக்கபயம் இந்

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக ஆதிசேஷன்பலராமரிடத்தில் அபயமென்று விழஅதைக்கண்டு பலராமர் ஆதரித்துகெருடனைப்பார்த்து இவன்இருந்தால்சண்டைநேரிடுமென்று தம்பிபோ அவனைக்காணுமென்றுகெருடபகவானைப்பார்த்துவாருமென்று சொல்லகெருடன்கேட்டுக்கொண்டுபோக பொழுதானது விடிந்தும்பாய் விட்டது தம்பியைக் காணோ

மென்று மயங்க அழுது அந்தமலரின்பேரில் பெருமானாக அவதரிக்க அப்பால் கிருஷ்ணமூர்த்தி பொழுது விடிந்ததைக்கண்டு வெங்கடேசபெருமாள் இருக்கிறபோது நகரிதேசத்தை ஆளாநின்ற அப்துல்காதர் மகளானவள் பொழுதுவிடிந்து பதினேழுநாழிகையாகிவிட்டபடியால நாளுக்குநாள் பூசைசெய்கிற வழக்கம்படி தாதிமார் புடைசூழ கொலுவுக்கு வருகிறவிதக்காண்க



நங்கை சொல் கவி.

சித்திரப்பதுமைபோலும் சேயிழையானமாது
புத்தியிலுயர்வதாக புண்ணியவதியுமாகி
சுற்றிலும்மாதர்சூழ்ந்து தொழுதமேசபையைநாடி
ரத்தினமயில்போல்மாது நங்கையும்வருகின்றளே.

நங்கை வருகிற தரு.

சித்திரைப்பதுமைபோலும் சேயிழையானமாது
புத்தியிலன்பாக மெத்தவேயோசித்து
பூசைசெய்யவேவந்தாள் வெகுரஞ்சிதமாது
பூசைசெய்யவே நடந்தாள்
பித்ததுகள் தான்கொண்டு பேய்பிடித்தவள்போல
பேதையதாகவே மாதுசிரோன்மணி சரு

பெருமையுடனேயவள் அருமைமாதர்கள்
வெருமையதாகவே பருமம்பேசிய சித்

முத்தாவிக்கைதன்ன மோகனமாலைகள்மின்ன
மொய்குழலாள்மாதுவந்தாள் கொலுவைநாடி சித்

பத்தியாய்மார்பினில் முத்துசரங்களாட
பாதத்தின்தண்டைகள் தாளசப்தங்கள்போட சரு
மங்கைசிரோன்மணி தொங்கியகாதில்
கங்கணவளையல்கள் கைதனில்வீச சித்

முல்லையரும்புபோல் பல்வரிசைகளாட
நல்லமூக்குத்தியுடன்வந்தாள் மிகவடிவினிலழகிய
மல்லிகைமலர்சூடி மங்கையருடன்கூடி
மாதுசிரோன்மணி வந்தாள் கரு

மத்தளதாளமும் துத்திசுருதிட
கைத்தளவீணையும் மெத்தமுழங்கிட சித்

வயல்சூழ்மஞ்சநகர்தனில்வாழ்ந்தி வன்னிகுலபால
அரியாதவடமலை என்னும்சீலன்
வைகுந்தவாசநாதன் மலரடியைதுதித்து
செய்யும்கவிக்கிதங்கி சிஷணைக்கார்த்திடும் சுரு
வண்மையாய்விட சாஸ்திரங்கண்டுமே
கன்னைவ்பேரில் கவியாகச்செய்தனன் சித்

வசனம்.

அடிவாடி சகிமார்களே என்னுக்குள்ளென்னைப்போல் எங்குநிறைந்திராநின்ற ஏகநாதனை கண்ணுக்கு நிறைந்த கணவர்வரவேண்டுமென்று கடவுளைத்துதித்து பூசைசெய்வோம் வாருங்களடி தாதிமார்களே.

நங்கை சொல் தரு.

வாருங்களம்மா தாதிமார்களே
மலையரிபூசை செய்வோம்
பாருங்கடி வணங்களெல்லாம்
பார்த்துபூசை செய்திடுவோம்
மல்லிகைவிருவாக்ஷி மருக்கொழுந்துபாரிஜாதம்
முல்லையரும்பெடுத்து முடிந்துசாம்தான்கொடுத்து
நல்லஜலநீர்தெளித்து நன்றாகத்தரைமெழுகி
கல்லின்மேல்கோலமிட்டு கண்மூடிஜெபித்திடுவோம்
கயிலாசனைப்போல் கணவன்வரவேண்டுமென்று
ஓயிலாகபூசைசெய்து உண்மையுடன்சோத்தரித்து
நின்றிடவேயெதிராக திருமகமென்றுயெழுதிகட்டு

பொதுவசனம்.

இந்தப்பிரகாரமாக நங்கையானவள் பூசைசெய்திருக்கும்போது தாதியானவள் நங்கையைப்பார்த்து ஏதென்று சொல்லுகிறளிதங்காண்க.

தாதிகள் சொல் தரு.

பூசைமுடிந்ததேயம்மா! போவோம்மதமனையம்மா பூ

நங்கை சொல் தரு

ஆசையுனக்கில்லை ஆனைத்துதிப்போமடி ஆ

தாதிகள் சொல் தரு.

இதுவேபயித்தியமா பின்னேரம்வேதம்படித்தாயம்மா இ

நங்கை சொல் தரு

மதிமயங்காதேவர்கூடி மகிழ்ந்திட நாதிப்பேன்போடி ம

பொது வசனம்.-

அகோதெப்படியென்றால் நங்கையானவள் ஒரே உறுதியாகப் பூசைசெய்து தாதிகளுடன் சம்வாதம் பேசிக்கொண்டு பூசைசெய்திருக்கும்போது வெங்கடேசபெருமாளாக இராநின்ற கிருஷ்ணமூர்த்தி இவளின் உறுதியை அறியவேண்டுமென்று கோபாலராய்மாடுகளை மேய்த்துவருகிறவிதங் காண்க.



இடையன் வருகிற தரு.

டேயலாரேடையோ டேயோ
டேயலாரேடையோ டேயோ

அண்ணமாரே தம்பிமாரே அடுக்காய்வாருங்கள்
இவளிருக்கிற முடுக்கைபாருங்கள்
கன்றுகளை வொன்றாய்கூட்டுங்கள் காக்கும்பசிகளைகாட்டுங்கள்
பெண்ணை நான் கண்டுவருகிறேன் அவளைபின் தொடர்ந்துநானும்
[போகிறேன்

வசனம்.

இவ்விதமாக வெங்கடேசபெருமாளாயிராநின்ற கிருஷ்ணமூர்த்தி இடையனைப்போல ரூபங்கொண்டு மாடுகளை ஓட்டிக்கொண்டு

மலையின்மீது வருகிறபோது நங்கையானவள் இடையனைப் பார்த்து செய்கிறவிதங் காண்க.

நங்கை சொல் தரு.

தாதியரேயொன்றாய் சேருங்கள்
தவடையிலேரெண்டு போடுங்கள்
சேதியரியாமல்வந்தவன் யிவனை
தட்டுபட்டென்றமே போடுங்கள் தா

சூதுசெய்யவந்தபாவியை யிவனை
தூரத்திபிடிப்போம் வாருங்கள் சூது

இடையன் சொல் தரு.

வாலிபமானயென்கண்ணே வந்திடுவாயென்தன்பின்னே
பாலுகள்காய்ந்திடும்பெண்ணே பார்வதியாளுட அண்ணன்
வேலைகளிக்லையோவீட்டில் வந்தாலே
பாலுதயிர்வெண்ணெய் பசியாரவுண்ணலாம்
பசுந்தமாய்வாடி பென்தன்மீதிலே
இஷ்டமாய் நாடி
கஷ்டமில்லாமலே கன்னியிருக்கலாம்
தசுந்தணம்காணுமே பட்சமாயிருபேண்டி வாலி

நங்கை சொல் தரு.

காட்டுக்கொடிகளைபிடுங்கி யிவனை
காலையுங்கையையுங் கட்டடி
பூட்டுத்தளையாக மாட்டுங்கடி
புரட்டிவிரட்டியிவனை உருட்டுங்கடி காட்

தாதிகள் சொல் தரு.

கூடிப்பிடிப்போம்நாம்வாரும் யிவனை
குறுக்கேமரித்திடுநீரும்
ஓடிப்போகுமுன்னே வாரும் யிவனை
உயிர்வந்தைசெய்தாலேதீரும் கூடி

இடையன் சொல் தரு

இவளழகையென்னசொல்வேன் இவள்மனதைஎப்படிவெல்வேன்
பவழவாய்திறந்துபதுக்குவாய் பாவிமதன்கணை யைவிலக்குவாய்
மாமன்மகளைப்போல் மருவியேயிருக்கலாம்
தாமதமில்லாமல் சந்தோஷமாகவே
தயவாகவாடிஎன்மீதில் நயமாகத்தேடி
தாடகைபோலவே தடுத்துநீபேசாதே
ஏடாகூடமாகயிங்கே யெதிர்த்துநீபேசாதடி இவ

நங்கை சொல் தரு.

கானகத்துயிடப்பயலே இவனை
கசக்கிப்பிழியலாம் கையாலே
ஆணவங்கொண்டு வந்தவனையிப்போ
கோலும்கம்பளியும் பிடுங்கடி
குடியினைப்பற்றியே யிழுங்கடி
பாலுபல்லாவை யுடையுங்கடி
பஞ்சாயபறக்கவே அடியுங்கடி

பொது வசனம்.

இவ்விதமாக கோபாலனுயிருந்த இடையனைப்பிடித்துத்தாரத்த அவர் மாய்கையாக வோடிட நங்கையானவள் யாரோவொரு இடையன் வந்து தன்னுடைய பதிவிரதாதனத்தைக் குலைக்க வந்தானென்று துக்கித்து புலம்புகிறவிதங் காண்க.

நங்கை புலம்பல் தரு.

எந்தன்மீதில்யென்னகோபமோ ஓ வைகுந்தவாசா
ஈடழிக்க தாபமாகுமோ
உந்தனைக்காண உண்மையானேனே ஓ வைகுந்தவாசா
ஓடிவந்து காரும்தேவனே
ஆரோவொருயிடையன்வந்துமே ஓ வைகுந்தவாசா
அழும்பானவார்த்தை சொன்னனே
என்னசெய்வேன் ஏதுசெய்வேன் ஓ வைகுந்தவாசா
இந்தவேளை வந்துகாருமே எந்தன்

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியை நினைத்து அழுதுகொண்டு இருக்கும்போது வெங்கடேசப் பெருமாளாக இருக்கப்பட்ட கிருஷ்ண மூர்த்தி சோதிக்கிறவிதங் காண்க.

வெங்கடேசப்பெருமாள் சொல் விருத்தம்.

எத்திசைமுனிவரெல்லாம் யெந்தனைத்துதிக்கக்கண்டேன்
கர்த்தனுமெழுந்திருந்து களிப்புடன்பணிகள்பூண்டு
உத்தமியிவளுமென்ன உண்மையாயிருக்கக்கண்டு
கர்த்தருமகாஷித்தா கருத்துடன்வருகின்றாரே.

வெங்கடேசப் பெருமாள் வருகிற தரு.

துஷ்டர்களையடக்கி சிஷ்டைகள்தான்புரியும்
திருவேங்கடராயர் கொலுசம்பிரமாக
திருவேங்கடராயர் வந்தார் து

மச்சாவதாரமாக மாயன்சோமுகனைப்பிடித்து
வச்சையுடன்பிளந்து யெரிந்துவிண்டு
பிர்மதேவனையடித்தேன் அவன்வேதம் நான்கையுங்கொடுத்தேன் சரு

பெற்றுக்கொண்டுமே வைத்துக்கொள்ளவும்
பத்தியாகவே சித்தமகிழ்ந்து து

மாபலிசக்ரவர்த்தி மதத்தையடக்கிவைத்தேன்
மாயமாகவே சென்றேன்
அந்தணராயாசகங்கேட்டேன் மூன்றடியிடம்
வாமனரூபமாகி வாழ்க்கையடைந்தேன்
வதைத்திடப்பட்டேன் மனங்கொதித்திடக்கொண்டேன் சரு

வாடியே அவனுயிர்சாட்டியே
நமக்குப்போட்டியாகவே கூட்டியனுப்பினேன் து

தூணில்நரசிங்கமாக தொடுத்தேன் அவதார
துஷ்டன் இரணியனை தூக்கியேமகிழ்ந்தேன்
அவனுயிரைப்போக்கியே மடித்தேன்
சாணுவன்பிரகலாதன் சஞ்சலங்களைத்தீர்த்தேன்
சாதகமாக வெகுபோதனையாக சரு

சாஸ்திரவேதமும் சகலமுந்தெரிய
சூஸ்திரமாகவே சுறுக்குடன்போதித்தேன் து

ஏழுமலைக்கதிபன் ஏகசக்ராதிபனாய்
எடுத்தேனவதாரம்பெருமாளாக தொடுத்தேன் துளசிமாலை
வாழுகன்னர் வந்துகரங்குவிக்க
வந்தனம்புரிய அவர்நிந்தனையறிய சரு

வாதனையாகவே போதனைமெய்தேன்
சேதிகளறிந்திடும் சீதரனை து

பாலன்வடமலை பாடினகவிதன்னை
பார்த்துமனங் களித்தேன்
சந்தோஷமாக போற்றிவரமளித்தேன்

சாலோகர்வாழ்கிருஷ்ணை சுவாமியுங்காணறிந்து
சற்குணசீலன் வெகுநற்குணபாலன் சரு

சந்தேகமொன்றுமில்லை யென்றுரைத்தேன்
வசகணமொன்று வைகுந்தரைத்துதித்தேன் து

வெங்கடேசப்பெருமாள் சொல் கந்தார்த்தம்.

அண்டமெலாமோரடியா யளந்த மாயன்
அலைகடலிற்பள்ளிகொள்ளும் அமரர்தேவன்
தொண்டர்களைக்காக்குமொரு வண்ணன் கண்ணன்
துஷ்டர்களைமதமடக்கும் தேவ கண்ணன்
குண்டலங்கள் செவியிலாட குலுங்கியாட
கூடிருந்தவண்டணியும் குழலாட
எண்டிசையும்போர்க்கலைதான் சங்குசக்ரமேந்தி
எழிலானபெருமானும் வருகின்றாரே.



வெங்கடேசப் பெருமாள் தரு.

வாராரேமாயவரும் பெண்ணைத்தேடி மலைமீதில்
நேராயோடி வாராரே
பாராயோஎந்தன்முகம் பச்சைதிருமேனியனே
கூறாயுனதுமொழி கோராய்வரமளிப்பேன்
திருப்பதிமலைவாழும் திருவேங்கடதாசன்
மறைபொருளாகவந்த மாயகிருஷ்ணதேவரோடி வா

வசனம்

வாரும் பெண்களா நீங்களெந்தவூர் எந்ததேசம் இங்கேவந்து அழவேண்டிய காரணமென்ன அதைச்சொல்லுங்களடிபெண்களா.

நங்கை சொல் தரு.

இவர்தாண்டியெந்தநாயகர் ஆசகிமாரே
இவர்தாண்டியெந்தநாயகர்

ஏவரும்மறியவென்னை இதமணம்புரிந்
ஏகபோகமாக திருப்பாரடியம்ம இவ

மையலதுகொண்டேனே ஆசகிமாரே
மையலதுகொண்டேனே

மையலதுதான்கொண்டு தையலர்களைக்கண்டு
மருவியொருமுத்தம் தருவாரோவருவாரோ இவ

வெங்கடேசப்பெருமாள் சொல் தரு.

பேசப்மொழிதனைக்கண்டு பிரியம்வைத்தாய்மனதுகொண்டு
ஆசையாகவென்னைக்கண்டு அணையுமென்றாய்மனதுகொண்டு
தாசியாளேயென்னைவந்து தழுவுமென்றாய்மனதுகொண்டு
கூச்சமுனக்கில்லையே கூருமென்றாய்வருவேனடி பே

நங்கைசொல் தரு.

காணவென்றால்யெந்தனுக்கு கண்கள்மிகவுங்கூசாதே
கதம்பம்பன்னீருவாடை களிக்கவேனிக்தே
பாணமும்மென்மேல்பாயுது பாய்ந்துவுன்மேல்தாவுது
மதன்கணைபொறுப்பேனோ காயத்தைதவைத்திருப்பேனோ

வெங்கடேசப்பெருமாள் சொல் தரு.

அனுக்கர்குலப்பெண்களைநான் யெடுக்கவுஞ்ஞாயமோ
தொட்டுயிழுத்தால்பழிபாவம் யென்னைச்சேருமே
அடுக்கமோயென்குலமனையிருக்க ஆசையாகவந்திருக்க
வாய்மொழிகளும்போகுமோ வையகத்தில்பழிப்பாகுமோ

நங்கைசொல் தரு.

காசியிலுள்ளமன்னவரோ கயிலாசவாசவரோ
தேசத்திலுள்ளதொரு தெய்வலோகத்தாசரோ

ஆசையும்விஸ்வாசமோ அதிகமனக்கூசமோ
நேசமென்மீதில்லையோ நீயெதுவோசொல்வாய்

வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியானவர் மனம்சோதிக்க நங்கையானவள் தான்செய்த தவத்தால்கயிலாசநாதனைப்போல் கண்ணுக்குநிறைந்தகணவனாகவுமிருக்கக்கண்டு ஓசெயுறதியாகவேசாவாருமென்றுசொல் லசுவாமியானவர் தடுத்துச்சொல்லநங்கையானவள் இந்தஉயிரைவிட்டு

விடுகிறேனென்று சொல்லி மோகங்கொண்டகோபத்தால் விழுந்து கிடப்பதைக்கண்டு சுவாமியானவர் நங்கையைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

நங்கையேயென்முகம் பாராய்நன்றாய்
ஒருகண்ணால் நேராய்
பொங்கியகோபத்தால் போவென்று தடுத்தேனே
அங்கங்குளிரவேதான் சிங்காரமாய்வாரும் பொ

மையலதுகொண்டேன் பெண்ணேயுன்மேல்
மருகவினைவது கொண்டேன்
மையலதுகொண்டு தையலரைக்கண்டு
மருவியொருமுத்தந் தருவாயோ மை

பொற்கொடிமாதேநீவாரும் புணர்ந்துமேயாசையைதீரும்
கற்பனைக்காரியென்று அப்பவேயறியேனே
அற்புதமாகவே சொற்படிநடப்பேன் நங்

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாகசுவாமியானவர் தேற்றிமாற்றி நித்திப்பவேட்டுவதுபோல சொல்லிநடக்க அவர் பின்னுலே தாதுக்கப்பெண்போலவதைக்கண்டு தாதியானவள் பயந்து அரசனிடம் சொல்லவரும்போது நகரிதேசத்தை யாளாநின்ற அப்துல்காதர் சாயபுகொலுவுக்கு வருகிறவிதங்காண்க.



அப்துல்காதர் வருகிற விருத்தம்.

கொட்டியேமேளசத்தம் குவலயமடமடெனக்க
கட்டியன்விருதுகூறி களிப்புடனமனதுகேறி
அட்டியில்லாமல்மந்திரி அனைவருஞ்சூழ்ந்துநிற்க
மட்டில்லாவரசுசெய்ப மன்னனும்வருகின்றானே.

அப்துல்காதர் வருகிற தரு.

நடுங்கவேகுடிகளும் நகரிதேசமாளும்
நல்லஅப்துல்காதர் வந்தானே
ஒடுங்கவேகுடிகளை உதைத்துவதைத்திட
அடங்காதபேர்களை அடித்துமடித்திட நடுங்

இடிகொம்புடக்கா பேரிகையடித்திட
எக்காளபேரிகை பூரிகையூதிட
எக்கணைவாத்தியம் வகையுடனூதிட
கொட்டிமுழக்குடன் நட்டுவர்பாடிட
முன்பாக மாதர்கள் தொந்தமாயாடிட
அட்டியில்லாமந்திரிமார் அருகினில்சூழ்ந்திட நடுங்

அப்துல்காதர் தேசவிசாரணை கவி.

அல்லிமான்ஜல்லிமான் அப்துல்ரகிமான்
அவரவர்களும்கொலுவினில் வந்தனர்களோ
ஷேக்மகம்மது செயலராவுத்தர்
சேனைத்தலைவர்களும் வந்தனர்களோ
டொப்பிஅங்கியும் ஜோடுகள்மாட்டியே
துரைத்தனத்தாரும் வந்தனர்களோ
இடையினில்கச்சையும் இறுக்கியேகட்டிடும்
எஜமான்ஷேக்மகம்மது வந்தனர்களோ
துப்பாக்கிதூக்கி தோளினில்வைத்து
தப்பாதென்றுசுடும் சவாப்பு வந்தனர்களோ
மாப்சல்தான் மதார்சாயிப்பு
மஸ்டீகர்களும் வந்தனர்களோ.

பொதுவசனம்.

அரசன் கொலுவாக இருக்கும்போது ஷணுக்கபெண்ணுக்கு சுவாமியானவர் வழிகாட்டி வனத்தைத்தாண்டி நடக்கிறவிதங்காண்க.

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

மங்கையேயென்கூட — வாரும்
மூலையெல்லாம்நீசுற்றி — பாரும்
எங்கள்வீடுயிது — தாண்டி
ஏகிநடந்திடுவோம் — வாடி
தாங்கும்கோபுரமிது — தாண்டி
தயவாகநடந்திடு — தூண்டி
இந்தமலைகளைத் — தூடர்ந்தோம்
அந்தமாய்தையல்களாடி — விளையாடி
சொந்தமாய்மையலுடன் — ஜோடியாய் சேருவோம் மங்

பொதுவசனம்.

இவ்விதமாக வெங்கடேச பெருமாளாகப்பட்டவர் ஷணுக்கபெண்ணுடனே நந்தவனம்போய் நந்தவனத்தின் வேடிக்கையை காண்பித்து போகும்போது அந்த சமயத்தில் தாதியானவர் அரசனிடம் சொல்லுகிறவிதங்காண்க.

தாதிகள் சொல் வசனம்.

கேளுமரசனே உன் மகளானவள் பூசை செய்திருக்கும்போது ஆரோ ஒரு புருஷன்வந்து பெண்ணை கண்ணே யென்றுசொல்லி அழைத்துக்கொண்டு போகிறானையா சுவாமி.

அப்துல்காதர் சொல் தரு

எங்கேயிருக்கிறான் — பாருங்களவனை
ஏங்கிப்பிடிப்போம்நாம் — வாருங்கள்
பொங்கும்சோறுபோல — காருங்களவனை
பிடித்துவடிப்போம்நாம் — சேருங்கள்

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

வருகிறவன்யென்ன செய்வானோ
வந்துமேகம்மையென்ன வைவானோ
அரிகரியென்று துதித்தேனே
ஆதிமூலமென்று மதித்தேனே வரு

நங்கை சொல் தரு.

வந்தால்வரட்டுமே பார்ப்போம்
வாய்மொழிதன்னையே கேட்போம்
சிந்தைகலங்கியே வாடாதேமன்னா
சிதறியேயுன்மனை மோடாதே வந்

அப்துல்காதர் சொல் தரு.

கொடிக்குள்ளேயெகிறியே பிடிப்போம்
கோகவேயவன்மனம் மடிப்போம்
துடிக்கவேயவனை யடிப்போம்
துஷ்டப்பயலைநாம் கெடுப்போம் கொ

வெங்கடேச பெருமாள் சொல் தரு.

சண்டாளியுன்னாலே கெட்டேனே
சாமர்த்தியமெல்லாம் விட்டேனேயெந்தன்
மண்டையுடைப்பான்போல் தோணுதே
மதிமயக்கமிக காணுதே சண்

நங்கை சொல் தரு.

கதறியேயோடாதே மன்னவாநீயும்
கலங்கிதவிக்காதே முன்னேவா
அதிரநடந்து ஓடாதேமன்னா
அஞ்சியேநீமனம் ஓடாதேமன்னா கத

அப்துல்காதர் சொல் தரு.


கண்டுமேகோபத்தால் மண்டையுடைப்பேனென்று
எட்டிவடித்தேனே
துண்டாகவெட்டுவேன் சண்டாளப்பயலென்று
கத்தியைப்பிடித்தானே

மன்னனும்வேந்தனிட பெண்ணைக்கொண்டு
மடையனேயென்றசொல்லி

குணவேயெர்தன்நெஞ்சம் கொண்டுவந்தபாவியென்று
கோபமாகவே குத்தினனே

புண்ணியதவத்துக்கு பதிவிரதையைக்குலைக்க
பாசக்கயத்தால்கட்டி யிழுத்தானே

யெண்ணியவிதிப்பயன் யிதுவோவுனக்கென்று
யேங்கித்தவித்திட பழித்தானே



வெங்கடேசப்பெருமாள் சொல் விருத்தம்.

உருக்கியதங்கந்தன்னை யொத்தியபதுமைபான
இவின்மோகத்தாலே திருடனென்றெனைப்பிடித்து

முறுக்கியகயிற்றினாலே முன்பின்னுயிருக்கக்கட்டி
நறுக்கியேயிழுத்துவென்னை நசுக்கிறுரென்னசெய்வேன்.

வெங்கடேசபெருமாள் புலம்பல் தரு.

ஐயோயிதென்னவிதியோ   வென்னை
அடித்துநீயும்பிடித்து   அநியாயம்செய்யவும் ஐ

வைகுந்தவாசராலே   வந்ததுதோயிது சரு
வாட்டியேயெந்தனை   சாட்டியடிக்குதீர்
வேட்டையையாகவே   கேட்டுகொள்வீரோ ஐ

உண்மையெதுவோசப்புவீர்   என்னைகட்டிநீயும்திட்டி
ஓடவேயிரட்டுதீர்   உண்மை
அண்ணன்தம்பியெனக்கு   ஆருமில்லையோ சரு

ஆசையால்வந்துமே   மோசம்தானுனேன்
பேசவுமென்மனம்   கூசுதேயென்செய்வேன் ஐ

கோபமில்லாமல்   கேளுமேநீயும்
குரித்துயென்னைமரித்தகுற்றம்பொருத்துவைத்துமேயாளும்
ஆபத்தைக்காக்கின்ற   ஆதிமூலமும்செய்ததுதோ சரு

அஞ்சியேநானுமே   கெஞ்சியேகேட்டிட
வஞ்சகமில்லாமலே   நெஞ்சினில்நாட்டியே ஐ

வெங்கடேசபெருமாள் சொல் விருத்தம்.

குறித்துமேயென்னைநீரும் கோபத்தால்கேட்பீரையா
உரைத்திடபுத்திசொன்னேன் உணராமல்பெண்ணைநீங்கள்
துரத்தியேயடிக்குறீரே துன்மார்க்கர்வந்துயென்னை
மரித்துமேஞாயமகேட்க மன்னரைகாண்கிலேனே.

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

ஆண்டவனேயென்று   ஆரோவொருபெண்ணுணவள்
அழுதாள்கேட்டேனையோ   துஷ்டர்களே
தாண்டியோனுமப்போ   தனியாய்வனங்கடந்து
தாரானமாகிப்போனேன்   துஷ்டர்களே
வேண்டியேமோகத்தால்   விரும்பியேவந்தேன்னை
விடமாட்டேனென்றுசொன்னுள்   துஷ்டர்களே

தூண்டிலகப்பட்டு அடிக்கின்றமீனைபோல
தூஷணித்துவந்தனையோ துஷ்டர்களே

அப்துல்காதர் சொல்தரு.

எந்தன்பலத்தையுங்காட்டி யிழுத்துவதைக்கிறேன்வாட்டியே
சிந்தைகலங்கவைக்கிறேன் தூக்கியேமண்ணில்வெட்டிப்புதைக்கிறேன்

வெங்கடேசபெருமாள் சொல் விருத்தம்.

மூடருக்குபுத்திசொன்னால் நம்பமாட்டார்
முழிகாட்டும்பெண்களுக்கு புத்திசொன்னால்கேட்கமாட்டார்
காடரியும்வேசியுடபரப்புப்போமோ
நலமுடனேபொருள்பறிக்கும் நடத்தையாகும்
வீணருக்குபுத்திசொன்னால் கேட்கமாட்டார்
வெள்ளைவிழிபிடித்திடவே விளையாட்டென்பார்
கூடவேயிவர்களுக்கு புத்திசொன்னேன்
கூட்டுவீர்யென்சொல்லை நிலைநாட்டுவீரே.

அப்துல்காதர் சொல் தரு.

புத்திசொல்லவந்தமூடனே யிடித்துத்தள்ளும்குடிகேடனே
சற்றுமஞ்சாமலேயெடுத்தானே பெர்தன்
சமர்த்தன்மகளையும் கெடுத்தானே புத்தி

வெங்கடேச பெருமாள் சொல் தரு.

எந்தன்பின் தொடர்ந்து யென்னிவரக்கண்டேன்
இடரொன்றும்செய்யவில்லை துஷ்டர்களே
எந்தன்மணப்புரிய உண்மையாகச்சொன்னேனே
உடம்பெல்லாம்நோகுதையோ துஷ்டர்களே
தந்தையாரென்னை தழுவினதேகமெல்லாம்
தணல்போலெரியுதையோ துஷ்டர்களே
சந்தனம்புனுகுடன் ஜவ்வாதணிந்ததேகம்
தரும்புதேயுதிரங்கள் துஷ்டர்களே

அப்துல்காதர் சொல் தரு

கிட்டிகோலெடுத்துமே மாட்டுங்கள்யிவனை
கிளப்பாமலேதள்ளி புரட்டுங்கள்
எட்டிநடவென்று வாட்டுங்கள் யிவனை
இழுத்துயென்முன்பாக கொட்டுங்கள்



வெங்கடேசபெருமாள் சொல் விருத்தம்.

என்னிடசம்பந்தத்தால் இருந்ததோராஸ்திமூன்றில்
உத்தனுக்குமூன்றிலொன்று உண்மையாய்தருவேனிப்போ
சொந்தமாய்வாங்கிக்கொண்டு சுருக்கினில்நீங்களிப்போ
அந்தமாம்தேசஞ்சென்று அரசதுசெய்திடீரே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியிடத்தில் மூன்றிலொருபங்கு ரொக்கம் பெற்றுக்கொண்டு போனபிறகு சுவாமியானவர் தங்கையாகிய காளிகாதேவியை நினைக்க காளியம்மனும் பிரசன்ன மாகிறதைக் காண்க.

காளிகாதேவி சொல் விருத்தம்.

கண்டவர்கலங்கியோட காலனுங்கடுநடுங்க
தொண்டர்கள்பயந்துவோட துடிக்குடன்சூலமேந்தி
சண்டிசாமுண்டிபூதம் சகலரும்புடைகள்சூழ
மண்டலத்தன்னில்தேவி மாகாளிவருகின்றாளே.

காளிகாதேவி வருகிற தரு.

பராசத்திகாளியிதோவந்தாள்   படையுடனே
பேய்பூதம்பிடைவிடாமல்சூழ

ஆமோகனமாலையாட அண்டத்தில்   தேவர்களும்கண்டுபயந்தோட
ஓமாகவேவீரங்கூறிய   சிங்கவாகனமீதிலேறியே - பரா

வேலாசூலங்கையில்தாங்கிடவே   திருபுரமும்
வேதநாதகீதம்   பாடிடவே
காலதண்டமுமிவள்   சூலமும்கைப்பிடி
உலகெலாம்புகழ்படைத்த   நீலி
ஓதுமாமறைவேதம்   பாடும்சூலி
அந்தணர்வேதம்   கூறிடும்பாலி
அதிவீரசூரர்கள்   கண்டுமேவாடிட பரா

சோதிடமாமணிமகுடம்   மின்னிடவேமார்பிலணிந்த
மீதிரத்தினமாலை   துன்னிடவே
காதிலோடியகம்மல்   தொங்கிடவே
கழுத்தில்சரப்பளி   மாலைமின்னிடவே
அண்ணன்பாதம்   அரியவேண்டியே
அதிகதுருசாய்காரிய   பரியவேண்டியே பரா

காளிகாதேவி சொல் வசனம்.

சருணம் சருணம் அண்ணாவே என்னையழைப்பித்த காரணம் திருவுளம்பற்றி யருளவேண்டும் மன்னாவே.

பொது வசனம்.

அகோ வாருமம்மா தங்கையே இந்த பெண்ணினாலே நான் பட்ட துன்பம் போதும் இவள் தந்தையானவன் என்னையடித்து அனியாயஞ் செய்தான் நீயும் அதிக சீக்கிரமாகச்சென்று மலையடிவாரத்தில் நின்றுகொண்டு உருட்டி மிரட்டி பயத்தைக்காட்டிவாரும் என் தங்கையே.

காளிகாதேவி சொல் தரு.

துடுக்குடன்தானெழுந்தாள்   காளிகாதேவி
சூதாகத்தானடந்தாள்

அடிக்கடிவாங்குவேன் அண்ணான்மகிழ
அஞ்சாதபயல்களை நெஞ்சைப்பிளந்திட துடு

வந்துமேகுதித்தாள் மனங்கலங்கி
நொந்துமே பதைத்தாள்
எந்தனைக்கண்டுமே எல்லாரும்துதித்திட
நொந்துமேமலையடி வாரத்திலிருந்திட

அப்துல்காதர் சொல் தரு.

சந்தோஷமாகவேகேட்ப்போம் இந்த
சதிரானமலையெல்லாம் நாமுமேகாப்போம்
வந்தவழிகளைப் பாரும்
வழிநின்றவள் யாருமேகூறும்

காளிகாதேவி சொல் கவி.

கூறுமென்றுசொன்னபோதே கொக்கரித்தெழுந்துகாளி
பாருங்களென்றுசொல்லி பதைக்கவேவதைப்பேனென,

காளிகாதேவி சொல் தரு.

காவல்தப்பிபோனதாரடா அடாதுஷ்டா
கள்ளனேநீயெந்த ஊரடா
ஆவலாகபோனசேதி அரியயெனக்குச்சொல்லும்
ஆட்டியேவுங்களை வாட்டியேவிடுவேன்காவலை
முழிக்காதேதிருடா எதிரில்வந்து
முகத்தைப்பாரடா திருடா
பழிக்குப்பழிவாங்க பார்த்தனேயின்னேரம்
ஒழுக்காய்சொன்னாலாச்சுது உன்னைநான்விடமாட்டேன் - காவ

அப்துல்காதர் சொல் தரு.

எந்தன்மகளை யெடுத்துவந்தவன் தன்னை
ஏங்கியே பார்த்துவந்தேன் நீலியரே
வந்தவழியிலேதான் வளைத்துக்கொண்டேனையும்
கண்டுநடுங்கிவாடி காரிகைமுகையிட்டுவாடி
காசிபணத்தைத்தந்தான் நீலியரே
கூடியடிக்கலாமோ

காளிகா தேவி சொல் வசனம்.

பூதங்களா நீங்கள் வாருங்கள் பிடித்துத்தின்னவே பாருங்கள் காதகபயல்களை யிப்போ கடித்துதின்னவே வாருங்கள் ஓடிவருகுமா மொருபூதம் இவர்களை வோங்கியடிக்குமா மொருபூதம் இவர்களை தாக்கியடிக்குமா மொருபூதம் ஆடிவருகுமாம் சிலகணங்கள் அதுக் கரை அடித்துபிடிக்குமாம் பலகணங்கள் வர்யைத்திரக்குமாம் சில பேய்கள் அப்போ வந்துகடிக்குமாம் பலபேய்கள் ஓங்கியடிக்குமாம் வேதாளம் ஓடியொளிவாராம் பாதாளம் கூடியடிப்பாளாங்காளியரும் அப்போ கொண்டாட்டம் கொள்வாளாம் காளியரும்.

அப்துல்காதர் சொல் விருத்தம்

அடித்திடவேபேய்பூதம் அலரியேயெழுந்திருந்து
தடித்துமேமனமும்வாடி சுவாமியைமனதிலெண்ணி
கொடுத்தம்தார்பொருளையெல்லாம் கொடுக்கிறேன்பேர்பாதித்தான்
தடுத்துநீசொல்லாமற்றான் தயவுடன்வாங்கிக்கொள்வீர்

வசனம்.

வாருமம்கா மாளிகாதேவி சுவாமியென்றறியாமல்செய்தகுற்றத் தாலும் காவலை தப்பிப்போனதாலும் கனம் பொறுக்கவேண்டும் இந்த ப்பொருளில் பேர்பாதி தருகிறேன் தடைசொல்லாமல்வாங்கிக்கொள் ளுமம்மா தாயே காளிகாதேவி.

பொது வசனம்.

இவ்விதமாக சுவாமியிடத்தில் பெற்றுவந்தபொருள்களில் பேர் பாதி பகர்ந்து காளிகாதேவிக்குதந்து போனபிறகு சுவாமியைப்பார்த்து நங்கை சொல்லுகிறவிதங்காண்க.

நங்கை சொல் வசனம்.

அகோவாரும் பிராணபதியே யிருவருங்கூடி கலந்திருப்போம் வாரும் பிராணநாயகா.

வெங்கடேசப்பெருமாள் சொல் விருத்தம்.

கோம்பியகலஅரிசி நொடிதனில்சமைப்பவள்போல்
வீம்புகள்பேசவேண்டாம் வேசியப்புறமேபோடி
பாம்பின்வாய்தேரைப்போல பதைத்துகாணிருக்கும்போது
சோம்பேரிதனமாய்யேயும் சிரித்துநீயிருந்திட்டாயே.

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

சுத்தப்பயித்தியக்காரி சொல்லுவாயேயின்னைமீறி
சற்றுபொருக்காமல் பெற்றதக்தையென்னை
சாட்டியேகோபத்தால் வாட்டி யடிக்கும்போது
காட்டியேகண்ணை நீ முட்டிவிட்டாய்சண்டை

நங்கை சொல் தரு.

பத்தினிதவமது போச்சேயிந்த
பாவத்துக்குள்ளாக லாச்சே
புத்தியுமக்கில்லையே ஒத்துநாமிருக்கவும்
பெண்பாவம்பெண்தோஷம் பின்னால்துடர்ந்துவரும்
பெருமையெந்தனை அருமையாய்சேர்ந்திடும் பத்

வெங்கடேச பெருமாள் சொல் தரு.

உருட்டியேகண்ணைக்காட்டியேமன்னன் உறுதியரிந்தாயேசிமாட்டி
பிரட்டியேவார்த்தைகள் பேசாதேநீபோடி
திருட்டுத்தனமாக சிராய்குலுங்காதே
முரட்டுத்தனங்கொண்டு முன்னேபலுக்காதே

நங்கை சொல் தரு.

முட்டியேவந்தென்னைபேசி முடுக்காதேயுந்தன்கையைவீசி
உருட்டியேகண்காட்டி திருட்டுத்தனமாக
ஊருக்குபோவோம்நாம் வாருமென்றழைத்திட்டாயே
உத்தேசித்துப்பாரு சத்தியமாய்சொன்னேன்-முட்

வெங்கடேசப்பெருமாள் சொல் சிசபத்தியம்.

காதலாயெந்தனை கலந்துயிருக்கவும்
கன்னியல்ல போடிபோடி

நங்கை சொல் சிசபத்தியம்.

பாதகாகாணுமே பதைத்துமேவாடிட
பாவிநீவந்தாயே மோடிசெய்ய

வெங்கடேசபெருமாள் சொல் சிசபத்தியம்..

ஒருவேயெந்தனுடன் உண்மையாயிருந்திட
உத்தமிநீயல்ல போடிபோடி

நங்கை சொல் சிபசத்தியம்.

போதமாகவே பிரிந்திடவெந்தனை
பிரியமாய்வந்தாயே யிந்தமோடி.

வெங்கடேசப்பெருமாள் சொல் சுலோகம்

வாதுகள்செய்ய வந்தாயோபோடி

நங்கை சொல் சுலோகம்.

காதலாய்வந்தேன் கன்னிவாடா

வெங்கடேசப்பெருமாள் சொல் சுலோகம்.

சேதிகளறிவேன் திருடிநீபோடி.

நங்கை சொல் சுலோகம்.

மாதுதான்வந்தேன் மருகவேகூடி.

வெங்கடேசப்பெருமாள் சொல் தரு.

இன்னமுமுனக் கென்னாயிருக்குது
இட்டுவந்ததோஷத்தாலே பந்தயிருக்குது

நங்கைசொல் தரு.

கண்ணைகாட்டியழைத்துவந்த கசடனேவாரும்
கண்டபடியேசிடுவேன் மூடனேவாரும்

பெருமான் சொல் தரு.

கப்பல்பணம்கிலவழிக்கும் கண்ணாளனேடி
கண்ணைகாட்டிபேசவந்தாய் எந்தனைவேண்டி.

நங்கைசொல் தரு.

தப்படிக்குந்தாதனைப்போல் தட்டிபேசாதே
தாராளமாயிங்குவந்து யிட்டுபேசாதே

பெருமாள் சொல் தரு.

மானயீனமில்லாமலே மரித்துபேசுறாய்
மானிகையில்லாரோவென்று குறித்துப்பேசுறாய்

நங்கை சொல் தரு.

ஊனமானமில்லையோதான் எத்துக்காரனே
எனக்குவழிசொல்லிப்போவாய் சித்துக்காரனே

பெருமாள் சொல் தரு.

காசிபனைம்பரிக்குங்கள்ள சிரிக்கியேபோடி
கைகாட்டிபேசவந்தாய் முரிக்கிசியேபோடி

நங்கை சொல் தரு.

ஊசிவிற்குங்குறவனைப்போல் உள்ளம்வாடியே
உத்துஉத்துப்பார்க்கவந்தாய் யென்னைத்தேடியே

நங்கை சொல் விருத்தம்

தேடிவந்தென்னை நீங்குகள்நினைத்தபாவி
கூடியேயிருந்தாலாச்சு குற்றங்கள்செய்வாயானுள்
நாடியேபெண்கள்பார்த்து நகைக்கவேயுன்னையிப்போ
வாடிடச்செய்வேனாலும் மடிபிடித்திழுப்பேன்பாராய்.

பொது வசனம்.

இந்தப் பிரகாரமாக சுவாமியை துலுக்கப்பெண்ணானவள் பிடித்திழுக்கும்போது அந்த சமயத்தில் மாயவன் இன்னம் மனஞ்சோதிக்கவேண்டுமென்று தன் பெண்சாதியைகாட்டி கூட்டிவரும்படியாய் நினைத்தபோது அனுமாரானவர் அந்தரமார்க்கமாய் வருகிறவிதங் காண்க.

அனுமார் சொல் விருத்தம்.

அண்டமும்கடுக்கிவாட ஆகாயதேவரோட
திண்டர்கள்கலங்கிவாட சூழ்ந்தபேய்பூதமோட
குண்டலம்செவியிலாட குலுக்கவேபணிகள்பூண்டு
எண்டிசைபுகழஆஞ்ச னேயரும்வருகின்றாரே.



அனுமார் வருகிற தரு.

வந்தானேயனுமந்த சூரன் வானுலகத்திலே
எதிரில்லாவீரன்

இந்திராதி தேவர்களாட
எத்திசைரிஷிமுனிவர் கத்திப்பாங்தோட
கடகங்கணங்களாட கண்டுமேபேய்பூதங்களாட
அஞ்சனைதேவி யீன்றபாலன்
ஆதிமூலத்தூக் கனுகூலன்

அனுமார் சொல் ஜம்பை

பச்சைதிருமேனியனே பாதமதில்யான்சரணம்
உச்சிதமாயென்னையழைத்த உத்தசேதிசொல்வீர்
மங்கைமன்வானசுவாமி மால்கிருஷ்ணபெருமானே
சங்கதிசொல்லவேண்டும் சுவாமிபெருமானே.

பொது வசனம்.

இந்தபிரகாரமாக சுவாமியானவர் நயனபாஷையால் அலமேலு மங்கையை அழைத்துவரும்படி சொல்ல அனுமாரானவர் தூது போகிறவிதங் காண்க.

அனுமார் சொல் கந்தார்த்தம்

கருமியேமுகங்கள்வாடி கயிலாயமதனைத்தேடி
குருவிபோல்பாங்தேயோடி கொக்கரித்தட்டுபீதி
மருவினையாடநீரும் மங்கையைக்கொண்டுவாரேனென்று
சரியானரூபங்கொண்டு.

அனுமார் சொல் தரு.

தாண்டியேவைத்தார் காலேதூங்கி
வேண்டிவைத்தார்
ஆண்டவர்சொற்படி அம்மாளையழைத்திட
ஆதிகயிலாயம்வந்து அருகினில்வந்திட
சேதிகயிலாயம்வந்து சிவன்பாதம்கண்டிட
துரிதமாயனுமந்தன் சுருக்கினில்வந்திட

பொது வசனம்.

இவ்விதமாக அனுமாரானவர் அலமேலுமங்கையை அழைத்து வரும்படி கைலாயம் வருகிறபோது முக்கண்படைத்த சிவபெருமான் கொலுவுக்கு வருகிறவிதங் காண்க.



பரமேஸ்வரர் சொல் விருத்தம்.

பார்வதிதனக்குகந்த பாசமாயீசன்தானும்
நேர்பணியலங்கரித்து நேரமாய்போகுதென்று
மீரியக்தாவெழுந்து விண்ணவர்பணிந்துநிற்க
காரிமையீசன்தானும் கனகசபைவருகின்றாரே.

பரமசிவன் வருகிற தரு.

கைலாசநாதரிதோவந்தார் சபையைத்தேடி
கைலாசநாதர்வந்தார் ஒயிலாய்நடைநடந்து
காதில்குண்டலமாட கையில்தண்டிகையேந்தி கயி

மயிலைப்போல்நடனமாட மன்னவர்கள்வந்துதேட
குயிலைப்போல்ராகம்பாட கொஞ்சியேமாதர்களாட
சடைமுடிதான்துலங்க சரப்பணிமேல்விளங்க கயி

இடையினில்பணிதுலங்க திருபுஜம்தான்குலுங்க
ஒருமனதாகவே உண்மையுடனிருப்போர்க்கு
பரமனென்றுதுதிப்போர்க்கு படியளக்கும்கர்த்தனே கயி

அனுமார் சொல் வசனம்.

சருணம் சருணமையா கர்த்தனே உமது மைத்துனராகிய வெ ங்கடேசப்பெருமாளானவர் அலமேலுமங்கையை அதிசீக்கிரமாக அழைத்துவரச்சொன்னாரையா பரமேஸ்வரரே.

ஈஸ்வரர் சொல் வசனம்.

அடா வாடா சிஷர்களே நமது தங்கையாகிய அலமேலுமங்கை யை அதிசீக்கிரமாக அழைத்துவாருங்கள் சிஷர்களே.

அலமேலுமங்கை வருகிற விருத்தம்.

வாசனைமலர்கள்சூடி வந்திட்டசபையைநாடி
பூசியசுந்தம்பவாடை புனுகுசவ்வாதணிந்து
கூசியேகண்கள்ரெண்டும் கொதித்திடும்சூரியன்போல்
மாசிலாமலமேரன்கான மங்கையும்வருகின்றாளே.



அலமேலுமங்கை வருகிற தரு.

அஞ்சுகம்போலவே ரஞ்சிதமானமங்கை
அலமேலுமங்கைவந்தாள் மிருவடிவினிலழகி
கொஞ்சிநடைநடந்து கோதையருடன்தொடர்ந்து தரு

குங்குமகளபமும் தங்கமேல்வீசிட
கங்கணவளையல்கள் கைதனில்ஜொலித்திட அஞ்

பச்சைவயிரமணி பதக்கம்பளபளென்ன தரு
பாதசரங்கள் தன்னிலே காலிலிட்டபாதசரங்கள்
அச்சுதன்தேவியென்று அதிர்ந்துமணங்கனிக்க

அஞ்சியேவனிதையர் வஞ்சியர்கூடிட
மிஞ்சியேகவரிகள் கொஞ்சியேபோடிட

முத்தாணிக்கையாட்டி முழித்துமேகண்கள்காட்டி
சந்நமஞ்சாமலே சபைதனில்கைகள்நீட்டி
உத்தமியிவளென்று சித்தங்களிக்ககாட்டி அரு

உன்னதமாதர்கள் கன்னியர்கண்டிட
என்னையழைத்தவர் தன்னையேவேண்டிட அஞ்

மாகிலாமயிலைப்போல் பூசிகளபம்வீச
ஈசனடிபாதம் காணவேமிகநாட
காரியுருமாலை கண்டசாங்களாட சரு

கண்ணாளர்தேவியும் பெண்ணியவிதியாய்
அன்னனமைத்திட புண்ணியமிதுவென்று அஞ்

அலிமேலுமங்கை சொல் தரு.

சருணஞ்சருணமண்ணா சடைமுடிக்கேசருணம்
திருமூவர்புகழ்கின்ற தேவாதேவாசருணம்
கொண்டல்வண்ணன்தேவியரை கூட்டிவரச்சொன்னதென்ன
எண்டிசையோர்தானறிய வெத்தனுக்குமுரைப்பீர் சரு

அலிமேலுமங்கை சொல் வசனம்

சருணஞ்சருணமண்ணாவே வென்னையழைப்பித்தகாரியமின்ன தென்று திருவுளம்பற்றி யருளவேணு மண்ணாவே.

பரமேஸ்வரர் சொல் தரு.

அத்தான்புனைத்தேடி அழைக்கமனைதழைக்க
அன்புடன் மணம்வாடி
பெற்றமேவாக்கது புறப்பட்டானுமந்தன்
உற்றசெதியது உண்மையாகச்சொன்னேன் அத்

அலிமேலுமங்கை சொல் தரு.

என்னைக்கிருக்கானும் மின்னுடிதாய்வீடு
இதைதமாகுமோ அண்ணண்ணா
பண்ணியதாவி பார்த்துகட்டிநேர்முகம்
பாராபவிருந்தோர்க்கு திராதவிசனம்சேரும்

பரமேஸ்வரர் சொல் தரு

என்னுடனேபிறந்தாய் யென தங்கை
இன்பமாய்நீவாழி அலமேலுமங்கை
பொன்னுபொருளெல்லாம் பூஷணம்நான் தந்தேன்
புத்தியாய்நீவாழ்குவாய் அலமேலுமங்கை

அலமேலுமங்கை சொல் தரு.

சடைமுடிதான் தரித்து சதுராய்யெதிராய்வந்து
சந்தோஷமாய்த்தருவாய் அண்ணாவேநீரும்
கொடிபெற்றநாளுமே கீர்த்தியாய்வாழ்வதற்கு
யடிதரப்குறையாமல் அடியாட்கருள்செய்வீர்

அலமேலுமங்கை சொல் வசனம்.

அகோகேளும் எனது அண்ணாவே என்மனதில் ஓர் கருத்திருக்கின்றது அது என்னவென்றால் தாய்வீட்டிலிருந்து சீதனமாக வரிசைபெற்றுக்கொண்டு போனதேயாகில் அதில் ஏதாவது ஒரு பொருள் குறைந்ததேயாமானால் ஓர் காலங்களில் கோபமான வேளையில் எளிதமாகச் சொல்லிக்காட்டுவார் அப்படி வாராமற்படிக்கு நெருப்புமநீரும் தவிர மற்றுயாவற்றுமான பொருள்களெல்லாம் பெற்றுக் கொண்டு போய் சந்தோஷமாய் வாழ்ந்திருக்க வேண்டுமென்று யெண்ணியிருக்கிறேன். நீர் அவ்விதமாகச் சந்தோஷமாய் தாரும் எனது அண்ணாவே.

பரமேஸ்வரர் சொல் தரு.

வயிரப்புஷ்பராகம் வைத்துயிழைத்திட்ட
வங்கிதோடாயிது யென்தங்கை

அலமேலுமங்கை சொல் தரு.

இவர்மாட்டிடாக்கடி மருவுசொருகுகம்பல
மாக்ஷிமையாய்தாரும் யெனண்ணா

பரமேஸ்வரர் சொல் தரு.

கொத்துசரப்பளி கோர்வையுறமாலை
குணமாகத்தந்தேனே யென்தங்கா

அலமேலுமங்கை சொல் தரு.

சித்தங்களித்துமே சிறப்பாகவைத்திட்ட
சிராணபெட்டிதாரும். யெனண்ணா

பரமேஸ்வரன் சொல் தரு.

காப்புகொலுசுடன் கண்டசரமாலை
கண்டுகொள்வாயென் தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

மாப்பிள்ளையுநானும் மகிழ்ச்சியாய்குந்திட
மனையொன்றுநீர்தாரும் என்னண்ணா

பரமேஸ்வரன் சொல் தரு.

காசிபட்டாசேலை கனந்த ஆரமாலை
கண்டுகொள்வாய்யெந்தன் தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

நாசியில்பதித்திட நல்லமூக்குத்தியொன்று
நலமாகநீர்தாரும் என்னண்ணா

பரமேஸ்வரன் சொல் தரு.

வாசனைமலர்கள்சூட்டி வைத்திடராக்கடி
வகையுடன்தந்தேன் யென்தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

கூடிடகண்களும் கொடுத்தநகைகளும்
குவலயம்புகழ்வாக யென்னண்ணா

பரமேஸ்வரன் சொல் தரு.

கூடத்தில்வைத்திட குடவிளக்குதந்தேன்
குறிப்பாயிதைப்பாரும் யென்தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு.

மாடத்தில்வைத்திட மணிவிளக்கொன்று
மாயவர்மகிழ்ந்திட யென்னண்ணா

பரமேஸ்வரன் சொல் தரு.

சொந்தமாகநீயும் சொன்னபொருளெல்லாம்
சுறுக்காகத்தந்தேனே என்தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு

என்தன்மாளிகைதனில் குந்தியபால்காச்ச
காற்காலியொன்றுதாரும் யென்னண்ணா

பரமேஸ்வரன் சொல் தரு.

தப்பிதமில்லாமல் செப்புகுடங்கள் தட்டு
தாம்பாளந்தந்தேனே யென் தங்காய்

அலமேலுமங்கை சொல் தரு

ஒப்பியேதானும்மே உண்மையாகப்பெற்றேன்
ஊருக்குப்போய்வாரேன் என்னண்ணே

அலமேலுமங்கை சொல் கவி.

குண்ணமல்யெந்தனுக்கு கொடுத்திட்ட வரிசைபெற்றேன்
கண்ணாளனுடனேகூடி களிப்புடன்வாழ்ந்திடாயே.

அலமேலுமங்கை சொல் தரு.

போய்வாரேன்போய்வாரேன் எனது அண்ணே
புண்ணியனூர்மாளிகைக்கு போய்வாரேனண்ணே

பரமசிவன் சொல் தரு.

போய்வாரும்போய்வாரும் எனது தங்காய்
புத்தியுடன்நீயும்வாழ்வாயே எனது தங்காய்



அநுமார் சொல் விருத்தம்.

திக்கெனதானெழுந்து துரிதமாயோடிவந்து
துடுக்குடன்புரவிநான்கை துரிதமாய்ரதத்தில்கட்டி
அடுக்காகாதத்தின்மீதில் அலமேலுமங்கையேற
சடுக்கெனரதத்தைத்தூண்டி சுவாமிமுன்வருகின்றாரே,

அநுமார் சொல் தரு.

நாகமணிதேரைநடத்தி அநுமந்தன்
பாகவதனைதிருத்தியே பாட்டைவழிகளிஸ்நடத்தியே

அலமேலுமங்கை சொல் தரு.

ஆக்கையும்கோட்டானும் அலரியோடுது
ஆகாசகுணங்கொண்டு மனதுவாடுது
வீச்சுளிகட்டியே வீரிட்டுவோடுது
போரவழியிலென்ன பொல்லாங்குநேருமோ
எண்ணியயெண்ணத்தில் யெங்கும்போாகுமோ
எனதுஅண்ணக்கீர்த்தி யெங்கும்போராகுமோ

அநுமார் சொல் கவி.

அஞ்சாதேயென்றசொல்லி அம்மனைத்தேற்றியே
அடிக்கடி புரவியைத்தூண்டியே ஆறுமலைகளைத்தாண்டியே

பொது வசனம்

இந்தப் பிரகாரமாக அலுமேலுமங்கையை அநுமாரானவர் அழைத்துவருகின்றபோது அந்தசமயத்தில் சுவாமியானவரைபிடித்து இழுப்பதைக்கண்டு என்பெண்ஜாதி வருகிறாளென்றசொல்ல கங்கையானவள் சுவாமியுடன் வாதாடுகிற விதங்காண்க.



கங்கைக்கும் சுவாமிக்கும் தர்க்கம்.

சுவாமி சொல் தரு.

கொண்டமனைவியாக்கும் கொண்டகம்பினைக்கொணுது
கோதையேபிறவர்தை கொண்ட

நங்கை சொல் தரு

அண்டையில்வந்திருக்க ஆசையானவன்நானிருக்க
ஆராதோமனம்போகாதோ அண்டை

சுவாமி சொல் தரு.

அடுக்குமோநீசொல்லும் வார்த்தையெல்லாம்பெண்ணே
அடுக்காதேகுடிகெடுக்காதே அடுக்கு

நங்கை சொல் தரு.

மூடுக்கானவார்த்தைபேசி மோசம்செய்யவேண்டாம்
கொடுக்காதேவார்த்தைதடுக்காதே மூடு

சுவாமி சொல் தரு.

பாவமென்றுபாராமல் தேவியாள்வந்தென்னை
ஏசுவாள்வாயாலேபேசுவாள் பாவ

நங்கை சொல் தரு.

கோபமாகவந்துதன் குமரியாளும்கைபிடிக்க
கொடுப்பேனோநான் கையாலடிப்பேனே கோப

சுவாமி சொல் தரு.

கண்டவளைகைபிடித்து கொண்டவளைவிட்டுவிட
கொள்ளுமோமனங்கள்ளுமோ கண்ட

நங்கை சொல் தரு.

கண்ணுக்குநிறைந்தசொரூ பெண்ணுநானிருக்க
காட்டுவீர்மிரட்டியோட்டுவீர் கண்ணு

சுவாமி சொல் தரு.

சக்களத்திவந்தாளென்று பக்குவமாயுன்னைக்கண்டு
கொட்டுவாள்வாயால்திட்டுவாள் சக்க

நங்கை சொல் அகவல்

என்னசொன்னாலும் இனிமேல்கேட்கேன்
கன்னிகழியாய்ப்பெண்ணை கைக்கொள்ளவந்து
என்னவார்த்தைகள் ஓட்டியேசொன்னாய்
பண்ணியேதடை செய்ய படிபாவியாயமோ
ஒப்பியேயெந்தனை உண்மையாய்சேரும்
தப்பிதமில்லாமல் தயவுடன்வாரும்

நங்கை சொல் தரு.

அரண்மனைக்குள்ளேநீர்வாரும் நீர்வாரும்
ஆசைதீர்க்கவேகன்றால் நீர் பாரும்

சுவாமி சொல் தரு.

வாராளேயிதோவென்தேவி யெந்தன்தேவி
வாவென்றழையாதேயென்னைக்கூவி யென்னைக்கூவி

நங்கை சொல் தரு.

சந்தோஷமாய்சொன்னவார்த்தை போச்சேபோச்சே
தனியாய்நிற்கவிதியாச்சே யாச்சே

நங்கை சொல் தரு.

மாயவித்தைகள்பேசி யென்னையேசி
மயக்கவந்தாயே கைவீசி

சுவாமி சொல் தரு.

தந்திரமாகவந்தமுன்னே வந்தமுன்னே
தயவானவார்த்தைகள் சொன்னேன்சொன்னேன்

நங்கை சொல் தரு.

மரியாதையாயென்கூடவாரும் நீரென்பின்வாரும்
மருவியணைத்தால்சுகம்போதும் போதும்

சுவாமி சொல் தரு.

தெரியாமல்யென்சொல்லைக்கேட்டு சொல்லைக்கேட்டு
தேம்பியழுவானேன்விதிகேட்டு விதிகேட்டு

சுவாமி சொல் கொச்சகம்.

கோமளமாதேயெந்தன் கொஞ்சுங்கிளிரஞ்சிதமே
காமன்கணையாலே களைத்துமிகவாடவேண்டாம்
ஜாமமதுகான்குக்கும் சதிருடனேயிருவருமாய்
மாமன்மகளைப்போல் மருவியேயிருந்திடும்

சுவாமி சொல் வசனம்.

கேளும் பெண்ணே நங்காய் மன்மதன் கணையால் வாடவேண்டாம் ஜாமம் கான்கும்போகுமுன்னே என் பெண்ஜாதிக்கு ஒருதந்திரம் செய்துவிட்டு வருகிறேன் பாரும் நங்காய்

சுவாமி சொல் கந்தார்த்தம்.

கோரியபெண்ணைப்போல குறைவொழிக்கவெண்ணி
சாரியாயன்னைகையில் சகலமும்பெற்றுக்கொண்டு
சீருடன்பணிகள்வாங்க சிந்தையில் நினைத்துபாவி
பாரிபாதத்தில்வைத்து வருகிறேனே.

சுவாமி சொல் தரு.

பாக்கியமேபாக்கியம் பெணநாதேகி
சிலாக்கியமே சிலாக்கியம்
பாக்கியமே பலபொருள்பெற்றவாரான்
போக்கிரிதனமாகவே பொருளிலொன்றுமறைத்தேன்
வாக்கைக்கொடுத்துமே வரிசையைக்கொடுத்தேன் பாக்

பொது வசனம்.

இவ்விதமாக அலமேலுமங்கை கொண்டுவருகிற வரிசையில் சுவாமியானவர் குறைக்க அந்தசமயத்தில் அனுமார் சொல்லுகிற விதங்காண்க.

அனுமார் சொல் தரு.

பாரிபசவுக்கெடுத்தான் அனுமந்தர்கைதனில்
பம்பாய்போலவே சுழட்டியடித்தான்
நோகப்புரவிகள் நில்லாமலோடிட
நெடுமுடிகொடிகளும் வேருடன்சாய்த்திட பாரி
ஆந்தையுங்கோட்டானும் அலறியோட
அலமேலுமங்கையும் கண்டுமேவாட
பார்த்துமேபக்ஷிகள் பயந்துமேயோட
பாயும்புலிகளும் கண்டுமேவாட பாரி

அலமேலுமங்கை சொல் விருத்தம்.

அண்ணனே யெந்தனுக்கு அளித்திட்டவரிசைபெற்றேன்
கண்ணாளர்பார்த்துப்பார்த்து கலங்கவேபேசுவாரே
பெண்ணைநாணும்பேய்போல் பின்னுநகைத்திடாமல்
எண்ணிலுங்குறைவு யில்லாமல் சொல்லுவாயே

வசனம்.

வாரும் அனுமந்தபாலகா நான் கொண்டுபோகின்ற வரிசையில் ஒரு பொருளாகிலும் குறைவில்லாமல் இருக்கின்றதா என்றுநோக்

ருப் ஒருசொல்லாக சொல்லுவார் ஆனதினால் இப்போது வந்த வரிசையில் ஒவ்வொன்றாகசோதித்துப் பார்த்து சொல்லும்,

அனுமார் சொல் தரு.

பத்துவிரல்நிறைந்த பவுத்திரமோதிரம்
ரத்தினமூக்குத்தியுடன் வர்திருக்கக்கண்டேன்

அலமேலுமங்கை சொல் தரு.

கங்கணகடகமும் கைக்கேற்றவளையலும்
மங்கைநான்சொன்னதுபோல் மகிழ்ந்துபாருமே

அனுமார் சொல் தரு.

கண்டசரமாலைகள் கழுத்திலிடுமாரங்கள்
தண்டையுடன்வந்திருக்க சதுராய்கண்டேனே

அலமேலுமங்கை சொல் தரு.

கொண்டைகுப்பிராக்கடி குலுங்கியிடும்பணிகளும்
எண்டிசைமதித்திடவே யிருக்குதாபாரும்

அனுமார் சொல் தரு.

மயிர்மாட்டிஜம்புலும் மருவிடும்கம்மலும்
வயிரத்தாலிழைத்துவைத் திருக்கக்கண்டேன்

அலமேலுமங்கை சொல் தரு.

சாலாழிபீலாழி காலிலிடும்பாதசரம்
காலாவிதத்திலுசுகளும் நன்றாய்ப்பாருமே

அனுமார் சொல் தரு.

பொருப்புடனேயுமதண்ணன் மகிழ்ந்தயளித்ததில்
கரிப்பிலே கண்டுகொண்டேனம்மணி

அலமேலுமங்கை சொல் தரு

விருப்பமாய்மனதிலெண்ணி வீட்டையான்விட்டுப்போக
பொருப்புடன்வரிசைதந்து போவென்றார்எனது அண்ணன்
சரிப்பிலேயிலேயென்று கலங்கியேயழுதுவாடி.
திருப்பதிபோகாமற்றான் திருப்பியேநடக்கின்றாளே,

வசனம்.

வாரும்! அனுமந்தபாலகா தாயற்றபோதே பெண் திக்கற்றதென்பார்கள் அதுபோல் எனது அண்ணன்செய்த சதியை ஏதோ

கடம்மைத்துக்கொண்டு தாய்வீட்டிலிருக்க [illegible] மையாயவன்வரிசை கொடுப்பதைப் போல் கரிய[illegible] வரிசைவைத் திருக்கக்கண்டேன் இந்த விடத்தில் தானே காவலாக யிரும் நான் அதிக துரிதமாகச்சென்று கரிவேப்பிலைவாங்கிக்கொண்டு வருகிறேன் அனுமந்தபாலகா.

அலமேலுமங்கை சொல் தரு.

சூரியசாபமது குறக்கப்போக — ஓ அண்ணா அண்ணா
குணமில்லாசகுணங்கண்டு நானும்வாரனே

கணவரும்நானுமாக கலந்திருக்கவே — ஓ அண்ணா அண்ணா
கண்ணால்பார்க்க கருத்திலேயோ

கூடப்பிறந்த தங்கையானும்மே — ஓ அண்ணா அண்ணா
குண்ணியேமனம் வாடலாகுமோ

காடுமலை ஆறுதாண்டியே — ஓ அண்ணா அண்ணா
கானுமோக கலங்கிவாரேனே

பொது வசனம்.

இவ்விதமாக அலமேலுமங்கையானவள் அழுதுக்கொண்டுபோக அந்த சமயத்தில் பொழுதுவிடிந்துவிட அதைக்கண்டு அலமேலு மங்கை நடு வழியில் நின்றுவிட அந்த சமயத்தில கங்கையானவள் சுவாமியைப் பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

கங்கை சொல் வசனம்.

வாரும் யென் பிராணநாயகா இருவரும் பள்ளியறை சேர்ந்து கூடி விளையாடுவோம் வாரும் பிராணநாயகா.

வெங்கடேசப்பெருமாள் சொல் தரு

ஏழையடிநானுனக்கு — யெந்தன்மீதில்கோபம்வேண்டாம்
வாழைப்பழநானளித்தேன் — வாங்கிபொசித்திடுவாய்
வெண்பொங்கல்புளியோரை — வேணதும்தந்தேன்யானும்
கண்மணியேவாங்கியும் — கண்டுபொசித்திடுவாய்
மாம்பழப்பிலாக்கனியும் — மற்றதெல்லாம்நீபொசித்தாய்
தாம்பூலம்கானளித்தேன் — தயவாய்தரித்துக்கொண்டும்



பொது வசனம்.

இவ்விதமாக சுவாமியும் கங்கையும் பஞ்சணையில் யிருக்கும் போது நான்கு ஜாமமுஞ் சென்றுபொழுதானது விடிந்தபோது அதைக்கண்ட போத சுவாமியானவர் தன்னுடைய மாய்கை தெரியும்படி ஆனந்த சந்தோஷங்கொண்டு ஆசையாய் நகைத்தபோது அந்த சமயத்தில் மார்பில் வைத்திராநின்ற மகாலக்ஷிமி வெளியில் வந்து பார்க்கும்போது கங்கையைக்கண்டு சொல்லுகிற விதங்காண்க

மங்கை சொல் தர்க்கம்

மாளிகையில்பேசவந்த மட்டிசிரிக்கி அடிமட்டிசிரிக்கி
மன்னரைகெடுக்கவந்த கெட்டசிரிக்கி அடிகெட்டசிரிக்கி

கங்கை சொல் தரு.

காளியைப்போல்வந்தாயடி காதகக்காரி அடிகாதகக்காரி
கண்மபடிபேசிடுவோம் வாதுகள்கூறிவாதுகள்கூறி

மங்கை சொல் தரு.

சண்டைபோடவந்தாயடி சதிகாரப்பாவி அடிசதிகாரப்பாவி
சுவாமியென்றபாசோணடி மரியாதையடிமரியாதையடி

கங்கை சொல் தரு.

கொண்டையைபிடிப்பேன் பேசாதேவாடிபேசாதேவாடி
கூடவந்தனுாயமென்ன சொல்லடிசூதாசொல்லடிசூதா

சுவாமி சொல் தரு.

ஆருக்கென்றுசொல்லுமேனான் ஆகித்தன்கண்மணி ஆகித்தன்
ஆத்திரப்படாதேபோடி கோபித்தன்கண்மணிகோபித்தன்கண்

மங்கை சொல் தரு.

தாசியோடியுந்தன்குலம் தளுக்காய்ப்பேசாதேதளுக்காய்
தாராளமாயிங்குவந்து நாணுமச்சிரியேநாணுமச்சிரியே

கங்கை சொல் தரு.

கூச்சமுனக்கில்லையோடி. கோபக்காரியே அடிகோபக்காரியே
கூந்தலைப்பிடித்தடிப்பேன் நாணுமச்சிரியேநாணுமச்சிரியே

மங்கை சொல் தரு.

வம்பாகபேசவந்தாய் வாயாடிபோடிவாயாடிபோடி
வந்துஞாயம்சொல்லவந்தாய் நீயுமேபோடிநீயுமேபோடி

கங்கை சொல் தரு.

சும்மாபேசவந்தாய்நில்லும் நில்லடி அடிநில்லுமநில்லடி
சோரம்செய்யவந்தவழி சொல்லிநில்லடி அடிசொல்லிநில்லடி

சுவாமி சொல் தரு.

அடித்துபேசாதேகங்கா கங்கையே அடிகங்காகங்கையே
அழுதுஅழுதுபேசாதடி. மங்காமங்கையே அடிமங்காமங்கையே

மங்கை சொல் தரு.

முட்டிமுட்டிபேசவந்தாய் முரிக்கிமுரிக்கியே அடிமுரிக்கிமுரிக்கி
முணுமுணென்றுபேசவந்தாய் கொழுத்தசிரிக்கியே அடிகொழுத்த

கங்கை சொல் தரு.

எட்டிஎட்டிபேசாதடி எதிர்த்துபேசாதே அடிஎதிர்த்துபேசாதே
எளிதமாய்கண்டபடி குறித்துபேசாதே அடிகுறித்துபேசாதே

மங்கை சொல் சிசபத்தியம்.

பெண்ஜாதிநானுமே பிரியமாய்வந்திருக்க
பேய்போலபுரலவேவந்தாயோடி போடிபோடி

கங்கை சொல் சிசபத்தியம்.

உண்ணவேசாதம் உணவரித்தபாக்கு
முன்னேமண்ணள்ளிபோடவந்த மலடிமலடி

மங்கை சொல் சிசபத்தியம்.

கண்ணுஜாடைகாட்டி கணவனைமயக்கியே
கைதலக்கவந்தாயோடி கழுதைநீபோடி

நங்கை சொல் விருத்தம்.

கன்னியே இருவரும் கணவன் கேளிக்கையை
கண்டுகந்தாய் போடிபோடி

மங்கை சொல் தரு.

இப்படிசொல்லாதேயிடிப்பேன் நான் போடிபோடி

நங்கை சொல் தரு.

அப்படி சொல்வினல் அடிப்பேன் போடிபோடி

மங்கை சொல் தரு.

ஒப்பியே யென்னுடன் உத்தமரீர் வாரும்வாரும்

நங்கை சொல் தரு.

கைப்பிடியாய்ப்பிடித்தேன் கணவனே நீர் வாரும்வாரும்

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

கூடியேமாதலர்வந்து குழித்தெல்லை மதித்திடாமல்
நாடியேகைப்பிடித்து நங்கையேசெய்கைப்பார்த்தாய்
கூடுமோர்மயில்மீதேறும் ஆண்டவன்முருகனைப்போல்
வாடியேதவிக்கநானும் வந்ததேவிதியென்செய்வேன்.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக சுவாமியைப்பிடித்து இழுக்கும்போது அவர் மனங்கலங்கி அழுது இருக்கும்போது மங்கை லட்சுமியும் நங்கை லட்சுமியும் பயந்து சுவாமியென்று அறியும்படிக்கு கோரமாகிய கோபத்தைக்காட்டி சொல்லுகிறவிதங் காண்க.

சுவாமி சொல் கந்தார்த்தம்.

கதிர்முடிசலகலென்ன கண்களில்பொறிபறக்க
துதியாதபேர்களில்லை சுவர்லோகமண்டலத்திலென்னை
மதியாதவிவர்சண்டை மானபங்கங்கள்செய்தார்.

சுவாமி சொல் தரு.

எடுத்திடுவேன்திருமனதையும் கொடுத்திடுவேன்
ஏங்கிதவிக்கதுங்கியேநானும் எடுத்திடுவேன்
அடித்திடுவேன் மங்கையாள்
கண்டுயேமனதில் வந்திடச்செய்வேன்
நங்கையாள் கண்டுமே நடுங்கியொடுங்கிடச்செய்வேன்
நாராயணுமேகோவிந்தாவென்று நாடிதுதிக்கவந்திடுவேன்

சுவாமி சொல் விருத்தம்

ஏக்கமாயெந்தன்மீதில் யிருந்திடும்பெண்ணேகேளாய்
தாய்க்கிழவிபோலயெந்தன் தலைவாசல்தனிலேநின்று
சீக்கிரமாகவேயெ சிறந்தபட்டாடைபூண்டு
பாக்குவெற்றிலைமடிக்கும் பணிப்பெண்ணாயிருந்திடாயே.

வ-ம் கேளும்பெண்ணே நங்காய் நீநம்மை நோக்கி தவம் புரிந்த படியால் உன் மனதின்படியே தரிசனந்தந்தேன் அப்போது என்னிட பாதத்திலிருந்து அனுதினம் துதித்துக்கொண்டு பணிப்பெண்ணாயிரும் பெண்ணே நங்காய்.

நங்கை சொல் கந்தார்த்தம்.

தேங்குமந்தாரை சண்பகம்
கொன்றையுடன் அறமலர்புஷ்பமேந்தி
பாங்குடனேபன்னீரால் அபிஷேகமாட்டி
பாதமதையான் துலக்கப் பணிந்துநின்றேன்
நான்குவிதப்பட்டாடை பாதம்துவட்டி
நல்லமலர்சாற்றியே நமஸ்கரித்தது.

நங்கை சொல் தரு.

பாங்குடனேயெனைக்காக்க தரிசனங்கொடுத்தீர்
எனக்காகசிந்தை கொந்தீர்
அரிகரியென்றம்மை அனுதினம்துதித்திட
வரிகிலைவீரர்போல வந்துவுறவாட
வைகுந்தவாசரே மலரடிசருணம்

சுவாமி சொல் கந்தார்த்தம்

பக்தியாள்நீயேயென்று பக்ஷமாய்கேட்டோர்
கர்த்தனுமெழுந்திருந்து கடுகியேயோடிவந்து
இத்தனைநேரமாயின் யென்னைத்திரிவைப்பார்த்தேன்
சித்திமியெனவேபெரி திருப்பதிநகரிலேதான்.

வெங்கடேசபெருமாள் சொல் தரு.

தரிசனங்கொடுத்தேன் யெனதுவரிசையுங்கைகொடுத்தேன்
அரசனைப்போல்வந்து புருஷனைக்காட்டி
அண்டையில்விறத்தியே பெண்டாளைப்போல்கார்த்தேன்

வாழி அகவல்.

இந்தசோர்சரித்திரம் இன்பமாய்கேட்டோர்
பார்த்தோர்வாசித்தோர் பலநாளும்
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரோடி
மூங்கில்போல்தழைத்து முசியாமல்வாழ்க
பாடினதோர்பிள்ளைக்கும் பாக்கியமருள்வாய்

காலுதலைநோகாமல் கண்ணுறவாராமல்
காத்திடவேண்டும் கடவுளேசருணம்.

மங்களம் தரு.

அடியுங்கள்ஜெயபேரிகை அச்சுதன்பேரில்
அன்பாய்மங்களம்பாடி அடி

கெடிகெடியாகவே கீர்த்திப்பிரதாபமாய்
கேட்டிடசத்தம் நாட்டிலுள்ளோர்காண அடி

டங்காபேரிகைசத்தம் எங்குமேகொட்டிட
சங்குசக்கரபாணி சரித்திரம்சொல்லிட
நாகசுரம்வீணை நகரிகள்ஊதிட
மேகமிரண்டோடி மேளத்தொனிகள்பாட அடி

நாககன்னிகள்வந்து நாட்டியமாடிட
நாரதர்வந்துமே வீணைகள்மீட்டிட
தேவர்களும்நின்று திருநடனமாட
மேவிஅலமேலு மங்கைசிரித்தாட அடி

பூதகிமுலைப்பாலை பிடித்துமேயுண்டிட
புண்ணியசரித்திரம் பூமியெங்குமதிர
மங்கைலட்சுமியையு மனதில்நினைத்திட
மாயனேயுன்பாதம் நாளும்மதித்திட அடி

அச்சுதாவைகுந்த அரிகரிகோவிந்தா
பச்சைநீலவர்ண பாதம்சருணமென்று
மச்சகூர்மவ தாராவராகநரசிம்மா
வாமனரூபா மலரடிசருணமென்று அடி

இருப்பதிநகரெங்கும் ஜெயபேரிமுழங்கிட
தேவர்கூடிபுஷ்ப மாரிபோல்பொழிந்திட
தாசன்வடமலை சரித்திரமுரைத்திட
தேசத்திலுள்ளோர்கள் தேடிதுதித்திட அடி

அரம்பையூர்வசிவந்து ஆலங்கரேந்திட
அழகாய்திருவடிகளவர் அன்புடன்களித்திட
வெங்கடேசபெருமாள் நாடகமுற்றிட
வேண்டிசிறுவன் ஞானமுனிசாமியச்சிட
அடியுங்கள்ஜெயபேரிகை அச்சுதன்பேரில்
அன்பாய்மங்களம்பாடி அடியுங்கள்

வெங்கடேச பெருமாள் நாடகம்
முற்றிற்று.

58 # நாடக விளம்பரம்.

	ரூ.	அ.
...டாசுர சம்மார நாடகம்	0	5
...பெருமான் நாடகம்	0	5
...ழுக்கொடி நாடகம்	0	5
...னலி நாடகம்	0	5
...ரித்திரன் களவு நாடகம்	0	5
...லிவீரராவணன் சண்டை	0	5
...ருஷ்ணன் தூது நாடகம்	0	5
...ணிபேத்த நாடகம்	0	5
...ராதிரோகை நாடகம்	0	5
...ராஜன் கடப்பளி நாடகம்	0	5
...பத்திரமாலை நாடகம்	0	5
...டகை சம்மார நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...சகோதரன் சண்டை நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...[illegible]சண்டை நாடகம்	0	5
...[illegible] மாளிகை நாடகம்	0	5
...[illegible]சண்டை நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...சுப்பிரமணியப்பெருமான் நாடகம்	0	5
...சம்மார நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5
...சூரசம்மார நாடகம்	0	5
...[illegible] நாடகம்	0	5

	ரூ.	அ.
அர்ச்சுனன் தபசு நாடகம்	0	5
[illegible]சதகம்	0	4
பலபேர்பாடிய ஒப்பாரி	0	3
[illegible] நாடகம்	0	6
அபிமன்னன் சண்டை நாடகம்	0	6
சயிந்தவன் சண்டை நாடகம்	0	6
கர்ணமோட்ச நாடகம்	0	6
மாடுபிடி சண்டை நாடகம்	0	6
[illegible]தாசர் நாடகம்	0	6
கோவில் நாடகம்	0	6
சாரங்கதர நாடகம்	0	6
ராவணசம்மார நாடகம்	0	6
சக்குபாய்சரித்திரம்	0	6
குசேலமாமுனிவர் சரித்திரம்	0	6
ஏகாதசி மகத்துவமென்னும் ருக்மாங்கதன் சரித்திரம்	0	8
கிருஷ்ண விலாசம்	0	8
[illegible]விரத நாடகம்	0	8
சீதா கல்யாணம்	0	8
கீசகசம்மார நாடகம்	0	8

சோதிட புத்தகம்.

	ரூ.	அ.
[illegible]	0	5
சோதிட அரிச்சுவடி முதல்பாகம்	0	4
ஷை இரண்டாம்பாகம்	0	4
வயித்திய அரிச்சுவடி	0	4
ஷை இரண்டாம்பாகம்	0	4
[illegible]	1	0
வயித்தியதிறவுகோல் 12-பாகம் ஒரேகட்டம்	0	10
[illegible] சோதிடம்	0	10

...வேட்லாக் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,
குனா-அப்பமணி அம்மான்,
[illegible]. சாமிப்பிள்ளை வீதி குனா மதுரை.